நடுங்கவைக்கும்

நரகம்

பொருளடக்கம்

اللّٰهُمَّ أَجِرْنَا مِنَ النَّارِ

தொகுப்பு
மௌலவீ அன்வருத்தீன் பாகவீ

காஜியார் புக் டிப்போ

நடுங்க வைக்கும் நரகம்

தொகுப்பு:
மௌலவி A. அன்வருத்தீன் பாகவி

வெளியிடுவோர் :
காஜியார் பதிப்பகம்

முஸ்லிம் தெரு, M. சாவடி, தஞ்சாவூர் - 613 001.
போன் : 235529 த.பெட்டி எண் : 29.

முகவுரை

இவ்வவனியில் பிறந்த மனிதன் ஏன் பிறந்தான்? எதற்காகப் பிறந்தான் என்ற வினாவெல்லாம் எழுப்பி, தான் பிறந்ததின் நோக்கத்தை - நுணுக்கத்தை புரிந்து கொள்ள முற்படுவா னானால் பொல்லாங்குகள், பொறாமைகள், புழுதிவாரி தூற்றுதல்கள் போன்றவைகள் இப்பூமண்டலத் தில் புகுந்திருக்காது. மாறாக அதை மறந்துவிட்ட காரணத்தால் அனைத்துக் கெடுதிகளும் ஆர்ப்பரிக்குமிட மாக அனைத்து துற்குணங்களும் நர்த்தனமாடுகின்ற அரங்கமாக இம்மண் ணுலகம் மாறிவிட்டிருப்பதைத் தான் காண முடிகிறது.

எனவே இந்த அகிலங்கள் அனைத்தையும் ஆட்டிப் படைக்கும் அல்லாஹ், மனிதனை ஏன் படைத்தான்? என்பதை அவனே திருமறையில் கோடிட்டுக் காட்டுகிறான். உங்களில் நற்செயல்கள் கொண்டவர்கள் யார் என்பதை (நேரிடை யாகவே) சோதிப்பதற்காக வாழ்வையும் மரணத்தையும் படைத்தான். (67:2) என்று பறை சாற்றுகிறான்.

மற்றொரு இடத்தில் அதே கருத்தை வேறொரு அமைப்பில் மனிதர்களையும், ஜின்களையும் எனக்கு முற்றிலும் அடி பணிவதற்காகவே படைத்தேன். (51:56) என பகர்கிறான்.

எனவே படைத்ததின் நோக்கம், நற்செயல்கள் செய்வோர் யார்? என அறிவதற்கே என புரிந்துக் கொள்ள முடிகிறது. அதற்கு முன் எது நற்செயல்? எது தீயசெயல் என்பதை விளங்க வேண்டுமல்லவா. அதற்காகத்தான் பலஇறைத் தூதர்கள் ஆதம் (அலை) முதல் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் வரை, இறைவேதத்தோடு அனுப்பப்பட்டு, இவ்வுலக மக்களுக்கு போதிக்க வந்தார்கள். அத்துடன் நற்செயல்கள் செய்து வந்தால் சீர்மிகு சுவர்க்கத்திற்கு செல்லலாமென நற்செய்தி கூறுபவராகவும், தீச்செயல் செய்து வந்தால் நாற்றமிகு நரகத்திற்கு நடைபோட நேரிடும் என அச்சத்தையூட்டி எச்சரிப்பவராகவும் இருந்து வந்ததால்தான், இறைத் தூதர்களுக்கு மறுபெயர், பஷீர் - நற்செய்தி தருபவர் என்றும்,

முன்திர் அச்சமூட்டி எச்சரிப்பவர் என்றும் திருமறையில் கூறுகிறான்.

நபியே! நான் ஒரு எச்சரிப்பாளர்தான் என்று மக்களுக்கு கூறிவிடுவீராக (36-65) என அறிவிக்குமாறு பறைசாட்டுகிறான். அது மாத்திரமல்ல, பிறிதொரு இடத்தில்,

நீர் ஒரு எச்சரிப்பாளர்தான் வேறல்ல (13-7) என்பதையும் விவரித்துக் காட்டுகிறான். இது போன்று பல இடங்களில் குறிப்பிடுகிறான்.

எச்சரிப்பாளர்தான் என்றால் எதைக்குறித்து எச்சரிப்பவர்? என்பதற்கு விளக்கம் வேண்டுமல்லவா. அதற்கு விளக்கமாகத் தான் நரகத்தைக் குறித்து எச்சரிப்பவர். நரகத்தைக் குறித்து எச்சரிப்பவர் என்றால், நரகம் என்று எதற்குச் சொல்வது? அதன் நிலையென்ன? அதனால் ஏற்படும் விளைவுகள் என்ன? அதற்கு செல்வோர் யார்? என்பதினை விளங்கிக் கொள்ள வேண்டும். அவ்வாறு விளங்கும் போதுதான், அதிலிருந்து தப்புவது எப்படி? தன்னைத் தற்காத்துக் கொள்வது எவ்விதம்? என்கின்ற உணர்வுகள் உள்ளத்தில் உதயமாகும். அதன் மூலம் கெடுதிகளை விட்டொழித்து, நன்மைகள் பக்கம் விரைகின்ற வாய்ப்பு கிடைக்கப் பெறும்.

ஆனால் நாம், சுவர்க்கம் - நரகம் என்பதையெல்லாம் வெறும் வார்த்தையளவில் வைத்துக் கொண்டதால், அதனால் ஏற்பட வேண்டிய விளைவுகள் ஏற்படவில்லை. எனவே தான் அதனுடைய உண்மை நிலையை அல்லாஹ்வும், அவனது தூதர் முஹம்மது (ஸல்) அவர்களும், முறையே குர்ஆனிலும், ஹதீஸிலும் என்ன சொன்னார்களோ அதை அப்படியே தங்கள் பார்வைக்கு தொகுத்துத் தருகிறேன்.

சுவர்க்கம் குறித்து ஏற்கனவே ''சுகம் தரும் சுவனத்தின் நிலைகள்'' என்ற நூலில் குறிப்பிட்டு இருக்கிறேன். இப்பொழுது நரகத்தின் நிலைகள் குறித்து தருகிறேன். அதைப் படித்து பயன் பெறும் மக்களாக திகழ வேண்டுகிறேன்.

மௌலவி ஏ. அன்வருத்தீன் பாகவி

உள்ளே இருப்பவை

1. நரகின் நிலைகள்

நரகத்தின் அமைப்புகள், அதன் ஆழநீள அகலங்கள், சுற்றுச் சுவர்கள், வாசல்கள் ஆகியவைபற்றி:

ஒரு சமயம், நபி (ஸல்) அவர்கள் சமூகத்தில் வீற்றிருந்த போது, ஏதோ ஒரு கல் விழும் சப்தம் கேட்டு இது என்ன சப்தம் என்று அறிவீர்களா என நாயகமவர்கள் கேட்க, நாங்கள் அல்லாஹ்வும் அவனது தூதரும் தான் அறிவார்கள் எனக் கூறியபோது, இது ஒரு கல், இதை அல்லாஹ் நரகின் மேற் பகுதியிலிருந்து போடுகின்றான். இது நரகின் கீழ்ப்பகுதிக்கு சென்ற வண்ணமாக எழுபது ஆண்டுகள் போய்க் கொண்டிருக்கும் அதனுடைய சப்தம்தான் இதுவென்று சொன்னார்கள் என அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (முஸ்லிம்)

இந்த ஹதீஸின் மூலம் நரகின் ஆழத்தை அனுமானிக்க முடிகிறது. மேல்புறத்திலிருந்து கீழ்நோக்கிச் செல்லும் கல், எவ்வளவு விரைவாகச் செல்லுமென்பதும், அவ்வளவு விரைவாகச் செல்லும் கல்லே, எழுபதாண்டு காலம் செல்லுமானால் எவ்வளவு ஆழம் கொண்டதாக அமைந்திருக்க வேண்டுமென்பதை அறிந்து கொள்ள முடியும்.

பிறிதொரு சமயம், நரகம் நாலு சுவர்களால் சூழ்ந்திருக்கும்; அதன் ஒவ்வொரு சுவரின் அகலமும் நாற்பது ஆண்டுகள் நடப்பதின் தொலைவு தூரம் கொண்டதாக இருக்குமென நபியவர்கள் சொன்னார்கள்.

ஒரு சுவரின் அகலமே இந்த அளவென்றால், பொதுவாக சுவரின் அகலமெல்லாம் அதனுடைய உள்பரப்பினுடைய அகலத்தை வைத்துத்தான் நிர்ணயிப்பார்கள். அப்படி யானால் உள்பரப்பு எவ்வளவு விஸ்தீரணம் கொண்டதாக இருக்க வேண்டுமென்பது புரிகிறதல்லவா.

அவ்வளவு பரப்புக் கொண்ட அந்நரகிற்கு எத்தனை வாசல்கள் உள்ளன என்பதை அல்லாஹ்வும் அவனது தூதரும் அறிவிப்புச் செய்கின்றபோது,

பொருளடக்கம்

அந்நரகிற்கு ஏழுவாயல்கள் உள்ளன. ஒவ்வொரு வாயிலிலும் (செல்லக் கூடிய வகையில்) அவர்கள் பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டு விடுவார்கள் (45-44) என்று இறைவன் திருமறையில் அறிவிப்பதின் மூலமும்,

அண்ணலெம் பெருமானார் அவர்கள் நரகிற்கு ஏழு வாயல்கள் உள்ளன. அவற்றில் ஒன்று யார் எனது சமுதாயத்திற்கெதிராக வாள் ஏந்தினார்களோ அவர்களுக்காக காத்து இருக்கிறது என நவின்றிருப்பதின் மூலமும், நரகிற்கு ஏழு வாசல்கள் உள்ளன என்பதை புரிந்துக் கொள்ளலாம்.

2. நரக எரிபொருட்கள்

அந்நரகில் எரிபொருளாகப் பயன்படும் பொருட்கள் என்னென்னவாக இருக்குமென்பதை பின்வரும் வசனங் களின் மூலம் தெளிவாக்குகிறான்.

எவர்கள் (மறுமை நாளை) நிராகரிக்கின்றார்களோ அவர்களுக்கு (அந்நாளில்) அவர்களுடைய பொருட்களும். சந்ததிகளும், அல்லாஹ்வினுடைய வேதனையிலிருந்து யாதொன்றையும் தடுத்து விடாது. இவர்கள் தாம் உண்மை யாகவே (நரக) நெருப்பின் எரிக்கட்டையாக இருக்கின்றனர் என்று கூறுகின்றான். இதன் மூலம் நிராகரிப்பவர்கள் நரக நெருப்பில் எரியும் கட்டையாக பயன்படுத்துபவர் என்பதையும் பிறிதொரு இடத்தில்,

(நிராகரிப்பவர்களை நோக்கி) நிச்சயமாக நீங்களும் அல்லாஹ் அன்றி மற்றவர்களை வணங்கிக் கொண்டிருந் தவைகளும் நரகத்தின் எரிக்கட்டையாக இருக்கின்றீர்கள். நீங்கள் யாவரும் அங்கு செல்ல வேண்டியதுதான் (21-98) எனக் கூறுவதின் மூலம் அங்கே நிராகரிப்பவர்களுடன் அவர்கள் தெய்வங்களென வணங்கிக் கொண்டிருந்தவர் களையும் நரகின் எரிபொருளாக பயன்படுத்தப்படும் என்பதையும் அறியலாம்.

பொருளடக்கம்

இதே கருத்தைத்தான் பிறிதொரு வசனமும் எண்பித்துக் காட்டுகின்றது.

விசுவாசிகளே! நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் மனிதர்களும் கற்களும் எரிபொருட் களாக இருக்கக் கூடிய நரக நெருப்பிலிருந்து காப்பாற்றிக் கொள்ளுங்கள் (66-6) என்று அறிவிக்கின்றான்.

இதில் மனிதர்கள் என்பது நிராகரிப்பாளர்களும் பாவிகளுமே. கற்கள் என்பது அவர்கள் தெய்வங்களென வணங்கிக் கொண்டிருந்த கற்சிலைகள் தான். இவைகள் தான் நரகத்தின் எரிபொருளாக விறகுக் கட்டையாக பயன்படுத்தப்பட்டு வேதனைக்குரியவர்களாக ஆக்கப் படுவர் என்பதனை அறியலாம். பிறிதொரு இடத்தில்,

வரம்பு மீறியவர்கள் நரகத்தின் எரிக்கட்டையாகி விட்டனர் (72-15) என்றும் கூறுகின்றான்.

வரம்பு மீறியவர்களென்பது இறைவன் இட்ட கட்டளைக்கு அடிபணியாமல் முற்றிலுமாக மறுத்து விட்டவர்கள் அல்லது முழுமையாக நிறைவேற்றாதவர்கள், ஆக அனைவருமே வரம்பு மீறியவர்களே. இதனடிப் படையில் பாவம் செய்த முஸ்லிம்களும் அடங்குவர்.

எனவே நரகில் வேதனை தரப்படும் பொருளாக எரியூட்டப்படும் விறகுகளாக நிராகரிப்பாளர்கள், அவர்கள் வணங்கும் கற்கள் மற்றும் வரம்பு மீறியவர்கள் ஆகியோர் காட்சியளிப்பார்கள்.

3. நரக நெருப்பின் தன்மைகள்

விறகுகளால் சூடேற்றப்படுகின்ற பாத்திரங்களின், உள்ளே வேகும் பலகாரங்களின் சூடே, கொதிக்கும் கொடுமையான சூடாக காட்சியளிக்கும்போது, அவ்விறகு கொள்ளிகளின் சூடும், அதனால் ஏற்படுகின்ற வெந்தணலும் எவ்வளவு வன்

கொடுமையாக இருக்குமென்பதை, கீழ் வரும் ஹதீஸ்கள் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன.

நீங்கள் எரிக்கும் இவ்வுலக நெருப்பின் சூடு, நரக நெருப்பின் சூட்டில், எழுபதில் ஒரு பங்கைச் சார்ந்தது என நபியவர்கள் கூற, அவர்களின தோழர்கள், இவ்வுலக நெருப்பின் சூடே, அதிகம் கடுமை வாய்ந்ததாக இருக்கிறதே என பகர, நபியவர்கள் ஆம், உலக நெருப்பின் சூட்டை விட நரக நெருப்பின் சூடு அறுபத்தொன்பது மடங்கு அதிகமானது என நவின்றார்கள்.

மேலும் ஒரு அறிவிப்பில், நரக நெருப்பில் இருந்தவர்கள் உலக நெருப்பில் போடப்பட்டால் அவர்களுக்கு தூக்கம் வந்துவிடும். ஏனென்றால் நரக நெருப்பை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இவ்வுலக நெருப்பு குளிர்ந்ததாக தென்படும் என வந்துள்ளது.

மேலும், நரக நெருப்பின் சூடு எவ்வளவு கடுமையானது என்பதைப் புரிந்து கொள்வதற்கு நபியவர்களின் கீழ்வரும் கூற்றே போதுமானது.

நரகவாசிகளிலே மிகமிக குறைத்த வேதனையுடைய மனிதர் யாரெனில், யாருடைய இருபாதங்கள் (மட்டும்) நெருப்பினால் தீக்கிரைக்கு ஆளாகியுள்ளதோ அவராகும். இந்த இருபாதங்களின் மீது படும் நெருப்பினால் அவருடைய தலையில் உள்ள மூளை கொதித்துக் கொண்டிருக்கும் என நவின்றார்கள் என்றால் - முழுக்க முழுக்க நரக நெருப்புக்கு இரையானவர்களின் நிலைமை என்னவாக இருக்குமென்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும்.

மேலும், நரகத்தின் கொடுமையைப் பற்றி நாயகமவர்கள் விளக்கும் போது, உலகில் மற்றவர்களைக் காட்டிலும், மிகவும் சீரும் சிறப்புடனும். பல இன்ப சுகங்களில் மூழ்கி திளைத்துப்போன ஒரு மனிதனை, நரகில் ஒரு தடவை போடப்பட்டு, பின் அவனிடத்தில், ஆதமுடைய மகனே! நீர் என்றாவது சுகங்களை அனுபவித்திருக்கிறீரா எனக் கேட்டால்,

அல்லாஹ்வின் மீது சத்தியமாக நான் ஒரு போதும் அனுபவிக்க வில்லையென்றே நரகின் கொடுமையைப் பார்த்தபின் கூறுவான்.

அது போல, உலகிலேயே மிகமிக கஷ்டப்பட்ட ஒரு மனிதனை நரகிலே போட்டு, அதன்பின் அவனிடத்தில் ஆதமுடைய மகனே! நீர் என்றாவது உலகில், கஷ்டத்தை கண்டிருக்கிறீரா எனக் கேட்டால், அல்லாஹ்வின் மீது ஆணையாக, நான் ஒருபோதும் கஷ்டத்தை அனுபவித்த தில்லை எனக் கூறுவான்.

ஏனெனில் நரக கஷ்டத்திற்கு முன், உலக கஷ்டங்கள் ஏதுமற்றதாக ஆகிவிடும் எனக் கூறினார்கள். (முஸ்லிம்)

இந்த ஹதீஸின் மூலம், உலகத்தின் இன்பதுன்பங்கள் அனைத்தும் நரக வேதனைக்கு முன் மதிப்பற்றதாக ஆகி ஏதுமற்றதாக ஆகிவிடும். எனவேதான் அல்லாஹ் அருள்மறையில்

கொழுந்து விட்டெரியும் நரக நெருப்பைப் பற்றி உங்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறேன். (92:14) என அறை கூவல் விடுமாறு, அண்ணலின் மூலமாக ஆணையிடுகிறான்.

அது மாத்திரமல்ல; நரகத்தின் நெருப்பு பயங்கர வெப்பமுடையது எனவும் கூறுமாறு ஆணையிடுகிறான். பிறிதொரு இடத்தில்,

ஹுதமா என்றால் என்னவென்று அறிவீரா? அதுதான் அல்லாஹ்வால் எரிக்கப்பட்ட நெருப்பு. (அது சரீரத்தில்பட்ட வுடன்) இருதயத்தில் பாய்ந்து தாக்கிவிடும், நரகத்திலுள்ள பெருங்கம்பங்களில் அவர்கள் கட்டப்பட்டு வாயில்களும் மூடப்பட்டு விடும் (104 : 9) எனக் குறிப்பிடுகிறான்.

இதன் மூலம், நரகநெருப்பின் பயங்கரத்தை புரிந்துக் கொள்வதோடு, அவர்களை பெரும் பெரும் கம்பங்களில் கட்டப்பட்டு, நரகத்தில் திணிக்கப்படுமென்பதை எடுத்துக் காட்டுகிறான். அத்துடன் அந்நெருப்பு அல்லாஹ்வால்

எரியூட்டப்பட்ட நெருப்பு என அறிவிப்பதின் மூலமும், அந்நெருப்பின் கொடுமையையும், கொடூரத்தையும், குறித்துக் காட்டுவதற்காக அவ்வாறு அல்லாஹ்வோடு இணைத்துக் காட்டி அல்லாஹ்வால் எரியூட்டப்பட்ட நெருப்பு என அறிவித்து அதன் உஷ்ணத்தின் உச்சக்கட்டத்தை உணர்த்துகிறான்.

வேறொரு, இடத்தில் அல்லாஹ், கொடிய அனல்காற்றிலும், கொதிக்கும் நீரிலும், அடர்ந்த இருண்ட புகையின் மத்தியிலும் இருப்பர், அங்கு குளிர்ச்சியுமிராது. ஆறுதலுமிருக்காது (56:42, 43, 44) எனக் கூறுகிறான்.

இதன் மூலம், அந்நரகத்தின் நிலைமை, எவ்வளவு பயங்கரமானதாக இருக்குமென்பதை நாம், இவ்வவனியில் ஆங்காங்கே காணும் கொடிய அனல் காற்றினால் ஏற்படுகின்ற எரிச்சல்களையும், கொதிக்கும் நீரினால் ஏற்படுகின்ற பயங்கரத்தையும், தொழிற்சாலை போன்றவை களில் ஏற்படுகின்ற அடர்ந்த இருண்ட புகையின் புகைச்சலையும் புரிந்துக் கொள்கின்ற நாம், நரகத்தினுடைய அனல் காற்றின் எரிச்சல், கொதிக்கும் நீரின் குடைச்சல், இருண்ட புகையின் புகைச்சல் எத்தகைய பயங்கரமிக்கதாக இருக்குமென்பதை உணரலாம்.

அது மாத்திரமல்ல, அந்நரகின் கொதிச்சப்தத்தைப் பற்றி அல்லாஹ் சொல்கின்றபோது,

அ(ந்நரகத்)தில் அவர்கள் தூக்கியெறியப்படும் பொழுது (கழுதையின் பெரிய சப்தத்தைப் போல்) அதன் கொதி சப்தத்தை கேட்பார்கள். அது குமுறிக் கொண்டிருக்கும் (67:7) எனக் கூறுகிறான்.

அதுபோலவே, பிறிதொரு இடத்தில், அ(ந்நரகமான)து இவர்களை கண்ட மாத்திரத்தில், சப்தமிட்டு ஆர்ப்பரிப்பதை இவர்கள் வெகு தூரத்திலிருந்தே தங்கள் செவியால் கேட்பார்கள் (25:15) எனக் குறிப்பிடுகிறான்.

இக்கூற்றின் மூலம், நரகம் எவ்வளவு கொதிகலன்களாக மாறி விடுமென்பதையும், அதனால் எழும் சப்தத்தை வெகு தூரத்திலிருக்கும் பொழுதே, அவர்கள் கேட்பார்களென்பதையும், அதுவும் நரகம் இவர்களைக் கண்ட மாத்திரத்தில் கோபத்தினால் கொப்பளித்துப் போனவன் குமுறி எரிந்து விழுவதைப் போல நரகமும் உண்மையிலேயே குமுறி - சப்தமிட்டு - ஆர்ப்பரிக்கும் என்பதோடு அதன் ஜுவாலைகள் கொழுந்து விட்டு, கொடூரமாக எரியுமென்பதை மேற்கண்ட வசனங்களின் மூலம் விளக்குகிறான்.

மேலும் நரகிற்கு, இயற்கையிலேயே நரகவாதிகளைக் காணுகின்ற போது ஆத்திரங்களும், கோபதாபங்களும் கொப்பளித்து வருகின்ற ரீதியில் நரகை அமைத்து விடுவான். எனவேதான் நரகத்தைப் பார்த்து அல்லாஹ் வினவுகின்ற போது,

அந்நாளில் நரகத்தை நோக்கி, உன்னுடைய வயிறு நிறைந்து விட்டதா? என்று நாம் கேட்போம். அதற்கு அது இன்னும் அதிகமாக ஏதுமிருக்கிறதா? என்று கேட்கும் (50:30) என்று இறைவன் குறிப்பிட்டுக் காட்டுகிறான்.

எனவே நரகம், நரகவாதியை தனது நெருப்புக்கு தீனியாக இன்னுமிருக்கிறதா என்று வினவுவது தனது கோபத்தின் வெளிப்பாடே தவிர, வேறல்ல. ஏனெனில் நரகம் தனது வயிறு நிரம்பவில்லை என்று சொல்லவில்லை. மாறாக இன்னுமிருக்கிறதா, கொண்டு வா எனது நெருப்புக்கு தீனியாக்குகிறேன் என சினத்தால் சீறிவிழுவதைத் தான் அப்படிக் கூறுகிறான்.

ஆக, நரகமே நரகவாதியினைப் பார்த்து சீறிவிழுந்து தனது கோரப்பசிக்கு இரையாக்கிக் கொள்கின்ற அவல நிலை ஒரு புறமிருக்க அதன் நெருப்பின் தணல்களால் வெந்து புலம்புகின்ற பரிதாபநிலை பார்ப்போரையே மாய்த்துவிடும். அத்தகைய வன்கொடுமைகள் அங்கே வட்டமிட்டுக் கொண்டிருக்கும். அந்தக் கொடுமையிலிருந்து தப்பிக்க அங்கே எந்த முயற்சியும் பலனளிக்காது. அல்லாஹ்வை ஏற்றுக்கொண்ட பாவிகள்

மாத்திரம் தாங்கள் செய்த பாவங்களுக்கேற்ப நரகத்தின் வேதனையை அனுபவித்து விட்டு வெளியேற்றப்படுவர். மற்ற நிராகரிப்பாளர்கள் அனைவரும் காலா காலத்துக்கு நரகிலேயே இருந்து வேதனைகள் அனுபவித்து அங்கேயே சதா நிலைத்திருக்க வேண்டியிருக்கும், அங்கே மரணம் ஏற்படாது. இதைக் குறித்து இறைவன் பல இடங்களில் குறிப்பிட்டுக் காட்டுகிறான்.

4. நரகத்தின் சாவாமின்மை

ஒவ்வொரு திசையிலிருந்தும் அவர்களை நோக்கி மரணமே வந்துக்கொண்டிருக்கும். எனினும் அவர்கள் இறந்து விடமாட்டார்கள் (11:17) என்றும் பிறிதொரு இடத்தில்.

நிச்சயமாக எவன் குற்றவாளியாக இறைவனிடம் வருகின்றானோ, அவனுக்கு நிச்சயமாக நரகந்தான் (கூலியாகும்) அதில் அவன் சாகவுமாட்டான்; (சுகத்துடன்) வாழவும் மாட்டான். (வேதனையை அனுபவித்துக் கொண்டு குற்றுயிராகவே கிடப்பான்) (20:74) என்றும் வேறொரு இடத்தில்,

எவர்கள் நிராகரித்து விட்டார்களோ அவர்களுக்கு நரக நெருப்புத்தான் கிடைக்கும். அவர்கள் இறந்துபோகும் விதத்தில் (அதில்) அவர்களுடைய காரியம் முடிவு செய்யப்படமாட்டாது. (வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கும் பொருட்டு இறக்காது உயிருடனே இருப்பார்கள்) அன்றி அந்த வேதனையில் அவர்களுக்கு ஒரு சிறிதும் குறைக்கப்படவு மாட்டாது (35:36) என நவிலுகிறான்.

ஆக மேல் கூறப்பட்ட வசனங்களின் மூலம், நரகவாதிகள் படுகின்ற வேதனை, மரண வேதனையாக இருந்தாலும் அவ்வேதனையில் அவர்கள் மாண்டு போய்விட மாட்டார்கள். எனவே அவர்கள் மாண்டு மரணித்துப் போகிற விதத்தில், முடிவுகள் ஆக்கப்படாமல் வேதனையை அவர்கள் சதா அனுபவித்துக் கொண்டிருக்கும் பொருட்டு இறக்காது,

உயிருடனே விட்டு வைக்கப்படுவார்கள். இந்நிலை அவர்கள் குற்றுயிரும் - கொலை உயிருமாக இருக்கும் நிலைக்கொப்ப இருப்பார்கள். அதில் அவர்கள் சாகவுமாட்டார்கள். சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கவும் மாட்டார்கள். ஆக அவர்கள் சதா வேதனையை அனுபவித்துக் கொண்டே நிரந்தரமாக இருந்து வருவார்கள். இதைக் குறித்து இறைவன்,

நீங்கள் நரகத்தின் வாயல்களில் நுழைந்து அதில் என்றென்றும் தங்கிவிடுங்கள் (40:76) எனவும், பிறிதொரு இடத்தில்,

நம்முடைய வசனங்களை அவர்கள், நிராகரித்துக் கொண்டிருந்ததற்கு கூலியாக இவர்களுக்கு நிலையான வீடு - அந்த நரகில்தான் இருக்கின்றன (41:28) என்றும், வேறொரு இடத்தில்,

நிச்சயமாக நரகம் (இந்தப் பாவிகளின் வரவை) எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது. (பாவியாகிய) இந்த வரம்பு மீறியோரின் தங்குமிடம் அதுவே. அதில் அவர்கள் காலா காலத்துக்கு தங்கிவிடுவார்கள் (78:23) என்றும், பிறிதொரு இடத்தில்,

எவர்களுடைய (நன்மையின்) எடை குறைகின்றதோ, அவர்கள் தங்களுக்கு தாங்களே நஷ்டத்தை உண்டு பண்ணிக் கொண்டு, எந்நாளுமே நரகத்தில் தங்கி விடுவார்கள். (23:103) என்றும் இறைவன் கூறுவதின் மூலம் நிராகரிப்பாளர்கள் நரகத்தில் என்றென்றும் தங்கிவிடுவார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். அதிலிருந்து அவர்கள் வெளியேறவோ வெளியேற்றப் படவோ மாட்டார்கள் என்பதையும் புரியலாம்.

5. நரகில் நெருப்பு மலை

நரகத்தின் வேதனைகளுக்கிடையில் வேறு பல வேதனைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கும். அவற்றில்

ஒன்று மலையிலிருந்து உருட்டிவிடுகின்ற கொடுமையான வேதனை. இதைக் குறித்து இறைவன்,

வெகு சீக்கிரத்தில் அவனை ஒரு நரகத்தின் மலையில் ஏற்றுவேன், (74:17) எனக் குறிப்பிடுகிறான்.

நபியவர்கள் விவரிக்கையில் ஸவூது என்பது நரகில் ஒரு நெருப்பு மலை. அதன்மேல் பகுதியை நரகவாதி எழுபதாண்டுக் காலமாக ஏறி அடைவான். பின் அங்கிருந்து கீழே வீழ்த்தப் படுவான். இவ்வாறே என்றென்றும் ஏறுவதும் வீழ்த்தப்படுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் எனக் கூறினார்கள். (திர்மிதி)

எனவே நரகில் பல்வேறு வேதனைகளுக்கிடையில் இது போன்ற மலையிலிருந்து உருட்டி விடுகின்ற கொடுமை யான வேதனையும் நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

6. நரகச் சங்கிலிகள்

அது மாத்திரமல்ல சங்கிலிகளாலும் விலங்குகளாலும் கட்டப்பட்டு, கடுமையான வேதனைக்கு இலக்காவதையும் வல்ல நாயன் குறிப்பிட்டுக் காட்டுகிறான்.

நிராகரித்தோருடைய கழுத்துக்களில் நாம் விலங்கிட்டு விடுவோம் (34:33) என்றும் வேறு இடத்தில்,

குற்றவாளிகள் யாவரும் அந்நாளில் விலங்கிடப் பெற்றிருப்பதைக் காண்பீர் (15:49) என்றும் பிறிதொரு இடத்தில்

அவர்களுடைய கழுத்துக்களில் சங்கிலிகளுடனும், விலங்குகளுடனும், அவர்கள் வேதனை செய்ய இழுத்துக் கொண்டு வரப்பட்டு முதலில் கொதிக்கும் நீரிலும் பின்னர் நரகத்திலும் திணிக்கப்படுவார்கள் (40:72) என்றும் மற்றொரு இடத்தில்,

(நரகவாதியாகிய) அவனைப் பிடியுங்கள். அவனுக்கு விலங்கிடுங்கள். பின்னர் அவனை நரகத்தில் தள்ளுங்கள்.

பின்னர் எழுபது முழ நீளமுள்ள சங்கிலியால் அவனைக் கட்டுங்கள் (69:32) என்றும்,

இவ்வாறு நரகவாதிகள் விசாரணை நாளிலேயே கைகால் கழுத்து இவைகளுக்கு விலங்கிடப்பட்டு, நரகத்திற்கு இழுத்துக் கொண்டு வரப்பட்டு தள்ளப்படுவார்கள். பின்னர் சங்கிலி களால் உடல் முழுவதும் கட்டப்பட்டு வேதனைத் தீயில், வெந்துருகுவார்கள். அச்சங்கிலி எழுபது முழ நீளமுள்ளதாக இருக்குமென்பதை எடுத்துக் காட்டு வதற்காகவே. எனவே இவ்வுலக முழத்தில் எவ்வளவு முழம் என்பது அல்லாஹ்வுக்கே தெரியும்.

7. நரக ஆடைகள்

அது மாத்திரமல்ல. அவர்கள் அணிந்திருக்கும் ஆடைகளோ தாரினால் செய்யப்பட்டு அது நெருப்பின் வெப்பத்தால் பார்வைக்கு கொழுந்து விட்டெரியும் நெருப்பாடைகளைப் போன்று அது காட்சியளிக்கும். இதைக் குறித்துதான் இறைவன்,

அவர்களது சட்டைகள் தாரால் நெய்யப்பட்டிருக்கும் (14-50) என்றும் பிறிதொரு இடத்தில்,

எவர்கள் நிராகரிக்கிறார்களோ அவர்களுக்கு நெருப்பு ஆடைகள் தயார் படுத்தப்பட்டிருக்கின்றன (22-19) என்றும் சொல்லிக் காட்டுகிறான்.

எனவே, நரகவாதிகளை, நரகநெருப்பு மாத்திரம் வேதனை செய்வதன்றி பலகோணங்களிலும் வேதனை அதிகப் படுவதற்காக. நரகத் தீ பட்டவுடன், குபீரென கொழுந்து விட்டெரியும் அமைப்பில், அவர்களின் ஆடைகளும், தாரால் செய்யப்பட்டிருக்கும் என்றால், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல, - அல்லவா இருக்கிறது. இந்த பயங்கரமான நிலைமை அத்தகைய வன்கொடுமைகள் அங்கே வட்டமிடும்.

8. நரகின் தேள் - பாம்புகள்

இவைகள் போதாதென்று, நரகில் பெரும் பாம்புகளும், தேள்களும் அவர்களை முத்தமிட்டுக் கொண்டிருக்கும். இதைக் குறித்து நபியவர்கள், நரகில் பெரும் நீளமான கழுத்துக் கொண்ட, ஒட்டகத்திற்குச் சமமான - பெரும் பெரும் பாம்புகள் இருக்கும். அவற்றிலிருந்து ஒன்று ஒரு தடவை கொட்டி விடுமானால், அதன் வலி நாற்பதாண்டுகள் இருந்து கொண்டிருக்கும். அதுபோலவே, தேள்களும் குப்பை கூளங்களைப் போன்று அதிகமாக காட்சியளிக்கும். இதுவும் அவற்றில் ஒன்று, கொட்டி விடுமானால் அதன் வலி நாற்பதாண்டுகள் வரை இருந்துக் கொண்டிருக்கும் என்றார்கள். (அஹ்மது)

இதன் மூலம், நரகில் அனைத்துக் கோணங்களிலும் கொடுமை அங்கே குடிகொண்டிருக்குமென்று புரிகிறது. ஒன்று கொட்டியதின் வலியே நாற்பதாண்டுக்காலம் நீடிக்கு மென்றால், அங்கேயிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான பாம்புகளும், தேள்களும் கொட்டிக் கொண்டிருப்பதின் மூலம், வலிகள் பன்மடங்காக பெருகி, பெருத்த வேதனைக்காளாகி அல்லலுறுவர்.

9. நரகத்தின் உணவு வகைகள்

நரகவாசிகள், நரகத்தில் மேல் குறிப்பிட்டது போன்று பல்வேறு வேதனைகளுக்கிடையில் - சிக்கி - சீரழிந்து - சிதைந்து போயிருக்கும் வேளையில், பசியின் கொடுமை தாளாமல் புசிப்பதற்கு ஏதுமுண்டோ என வேண்டுவார்கள். அப்பொழுது அவர்களுக்கு, தரப்படும் உணவுகளைக் குறித்து, இறைவன் கீழ்வருமாறு குறிப்பிடுகிறான். அது ஒவ்வொன்றும் எத்தகைய உணவுகள் என்பதை இறைவனே சொல்வதைக் கேளீர். முதல் வகை உணவு,

நிச்சயமாக (நரகத்திலிருக்கும்) கள்ளிமரந்தான் பாவிகளின் ஆகாரமாகும். (அது) உருகிய செம்பைப் போல், அவர்

களுடைய வயிறுகளில் கொதிக்கும். வென்னீர் கொதிப்பதை போல் (அது கொதித்துப் பொங்கி வரும்) (44:46) எனவும், பிறிதொரு இடத்தில்,

நிச்சயமாக அக்கள்ளிமரம், நரகத்தின் அடித்தளத் திலிருந்து வெளிப்பட்ட ஒரு மரமாகும். அதன் கிளைகள், சர்ப்பத்தின் படத்தைப் போலிருக்கும். நிச்சயமாக அவர்கள் (தங்களின் பசிக்கொடுமையால்) அதனையும் புசிப்பார்கள். அதனைக் கொண்டு அவர்களுடைய வயிற்றை நிறைத்துக் கொள்வார்கள். (ஆனால் அவர்களுடைய பசி தீர்ந்து விடாது) (37:66) என, இறைவன் கள்ளிமரத்தின், இலை தழைகளை உணவாகத் தருவதைப் பற்றிக் குறிப்பிட்டுக் காட்டுகிறான்.

இந்தக் கள்ளிமரத்தின் தன்மையைப் பற்றி அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சொல்லிக் காட்டும் போது, இந்தக் கள்ளிமரத்தின் ஒரு துளி இவ்வுலகில் போடப்பட்டால், உலகில் உள்ள அனைத்து உணவுப்பொருட்களும், ருசிமாறி, கசந்து போய்விடும் எனக் கூறிவிட்டு, நரகவாதியின் உணவே கள்ளிமரமாக இருந்தால், அந்நரகவாதியின் நிலைமை, என்னவாக இருக்குமென்பதை அறிவீர்களா? எனக் கேட்டார்கள்.

இதன் மூலம், கள்ளிமரம் எவ்வளவு கசப்புத்தன்மை வாய்ந்தது என்பதை யூகிக்க முடியும்; அதுமாத்திரமல்ல, இறைவன் சொல்லிக் காட்டுவதைப்போல, அந்த கள்ளிமரத்தை சாப்பிட்ட நரகவாதிகளின் வயிறுகளில் அது உருகிய செம்பைப் போல, கொதித்துக் கொண்டிருக்கும். ஏனெனில், அம்மரம் நரகத்தின் அடித்தளத்திலிருந்து வெளிப் பட்ட மரமாகும். எனவே நரகிலிருந்து வெளிப்பட்ட மரமும் நரகைப் போன்று மிக உஷ்ணம் நிறைந்ததாக இருக்கும்.

அத்தகைய உஷ்ணம் நிறைந்த மிக கசப்பு வாய்ந்த கள்ளி மரத்தை தங்களின் பசியின் கொடுமை தாங்காமல் சாப்பிட்ட அவர்கள் மேலும் பல இன்னல்களுக்கு இலக்காகுவார்களே தவிர அதனால் அவர்களுடைய பசி தீர்ந்து விடாது. என்றும் போல் பசி இருந்து கொண்டிருக்கும். மீண்டும் பசியைப் போக்க

சாப்பிட முற்படுவார்கள். இப்படியே இவர்களின் நிலை நீடூழி காலம் நீடித்துக் கொண்டிருக்கும். முடிவே இருக்காது. இது முதல் வகையான உணவு.

அடுத்து கருவேல முட்கள் கொண்ட ஒரு வகை உணவு. அதுவும் கள்ளிமரத்தைப் போல் கசந்துபோயிருக்கும். அதைக் குறித்து இறைவன் திருமறையில்,

அதில் அவர்களுக்கு (விருப்பமான உணவுகளில்) கருவேல முட்களைத் தவிர வேறொன்றும் ஆகாரமாக கிடைக்காது. அதை சாப்பிடுவதினால் அவர்களுடைய சரீரம் கொழுக்கவும் செய்யாது. (அவர்களுடைய பசியும்) தீராது. (88-7) எனக் குறிப்பிடுகிறான்.

இவ்வசனத்தில் கருவேல முட்களைத் தவிர வேறெந்த உணவும் கிடைக்காது என்று சொல்லியிருப்பதின் கருத்து, கசந்த - ருசியற்ற உணவுகளைத் தவிர வேறெந்த ருசியான உணவும் கிடைக்காது எனப் பொருளாகும். இந்த உணவின் மூலம் அவர்களின் நோக்கம் நிறைவேறாது. அதாவது இதை சாப்பிடுவதின் மூலம் உடல்வலுவோ, பசி நீக்கமோ ஏற்படாது.

அடுத்து மூன்றாவதாக சீழ்-சலங்களைக் கொண்ட உணவு. இதைக் குறித்து இறைவன் கூறும்போது, விருப்பமான உணவுகளில் புண்களில் வடிவம் சீழ் ஜலங்களைத் தவிர வேறு ஆகாரமில்லை. அதனைக் குற்றவாளிகளைத் தவிர மற்றொவரும் புசிக்கமாட்டார்கள் (69-27) என்று குறிப்பிட்டுக் காட்டுகிறான்.

எனவே நரகவாதிகளுக்கு அவர்களின் உடலில் தீப்புண்களிலிருந்து வடியும் சீழ் ஜலங்களையே அவர் களுக்கு உணவாகக் கொடுக்கப்படும். ஆக கள்ளிமரம், கருவேல முட்கள், புண்களில் வடியும் சீழ் ஜலங்கள் என மூன்று விதமான ஆகாரங்களை குறிப்பிடுகிறான். இதை ஒவ்வொன் றையும் குறிப்பிடுமிடத்தில் அதைத் தவிர வேறு ஆகார மில்லை என்று மற்றதை நீக்கிச் சொல்வது பொதுப்படையாக வேறு எந்த

பொருளடக்கம்

உணவுமில்லை என்ற அடிப்படையில் அல்ல. மாறாக விருப்பமான உணவுகளில் அதைத் தவிர எந்த ஆகாரமு மில்லை என்றே பொருள் கொள்ள வேண்டும்.

இந்த மூன்று விதமான உணவுகளும் மிகவும் கசப்புத் தன்மை நிறைந்த உஷ்ணம் மிகுந்த மிக நாற்றம் கொண்ட பார்க்கவே அறுவறுக்கத்தக்க உணவுகளாக நரகவாதி களுக்கு புசிக்கத் தரப்படும். இதனால் அவர்களின் வயிறு நிரம்பச் செய்யாது. மாறாக அதன் மூலம் பல இன்னல்களுக்கு ஆளாக்கப்படுவர். அது மாத்திரமல்ல அவ்வுணவுகள் ஒவ்வொன்றுமே தொண்டையில் சிக்கி விக்கிக் கொள்ளக் கூடிய உணவுகளாகவே இருக்கும். அது உள்ளேயும் செல்லாமல் வெளியேயும் வராமல் விக்கிக் கொள்ளக் கூடிய விபரீதமான நிலை ஏற்படுமென்பதை இறைவனே திருமறையில் சுட்டிக் காட்டுகிறான்.

நிச்சயமாக நம்மிடத்தில் விலங்குகளுமிருக்கின்றன. நரகமும் இருக்கின்றது, விக்கிக் கொள்ளக் கூடிய ஆகாரமும் இருக்கிறது. (73-32) என சொல்லிக் காட்டுவதின் மூலம் நரகத்தின் உணவுகள் உடனடியாக உள்ளே சென்றுவிடக் கூடிய எளிதான உணவல்ல. அது தொண்டையில் சிக்கி கொள்ளக் கூடிய சிரமத்தை தரக்கூடிய உணவு என்றும் சொல்லிக் காட்டுகிறான்.

இத்தகைய சிக்கிக் கொள்ளக் கூடிய உணவை சாப்பிட்டு நரகவாதிகள், அந்தச் சிக்கலிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள அருந்துவதற்கு நீர் கேட்பார்கள். அப்பொழுது அவர்களுக்கு தரப்படுகின்ற நீர் எவ்வளவு கொடுமை நிறைந்ததாக இருக்குமென்பதை இறைவனின் திருவசனங் களே உணர்த்துகின்றன.

10. நரகத்தின பான வகைகள்

அவர்கள் தண்ணீர் கேட்டு முறையிட்டால் காய்ந்து உருகிய செம்பைப் போன்ற நீரே அவர்களுக்குக் கொடுக்கப்படும்

(அவர்கள் அதனைக் குடிப்பதற்கு முன்னதாகவே) அது அவர்களுடைய முகத்தை சுட்டுக் கருக்கி விடும். (அன்றி) அதுமிக்க அறுவறுக்கத்தக்க பானமாகும். (18:29) என்று குறிப்பிடுகிறான். பிறிதொரு இடத்தில்,

கொதிக்கும் நீர் புகட்டப்பட்டு, குடல்களையெல்லாம் துண்டு துண்டாக்கி விடும் (47:15) என குறிப்பிடுகிறான்.

இவ்விரு வசனங்களின் மூலம், அவர்களுக்குத் தரப் படுகின்ற நீர், காய்ந்துருகிய செம்பு ஈயத்தைப் போன்ற கொதிக்கும் நீர் புகட்டப்படும். அது எத்தகைய தன்மை வாய்ந்தது என்றால் அது அருந்துவதற்கு அவர்களது முகத்திற்கு மூன் கொண்டு வரும் பொழுதே அவர்களது முகத்தை பொசுக்கி விடும். அருந்தி விட்டாலோ அவர்களுடைய குடல்களை யெல்லாம், துகள் துகள்களாக சிதறி சின்னா பின்னமாக ஆக்கி – சீர் குலையச் செய்து விடும் என்று அறிவிக்கின்றான் என்றால் நரகத்தின் வேதனையைக் குறித்து நம்முடைய நாடி நரம்புகளெல்லாம் நடுநடுங்கிப் போக வேண்டாமா?

மேற்கூறப்பட்ட வசனத்திற்கு விளக்கமாக, அண்ணல் நபியின் அமுதவாக்கொன்று ஹதீது ஷரீபில் இடம் பெற்றிருக்கிறது.

நரகவாதிகளுக்கு பசியின் கொடுமை ஏற்படும். அக்கொடுமை, பல்வேறு வேதனைகளுக்கிடையில் பெரும் வேதனையாக வெளிப்படும். எனவே சாப்பிடுவதற்காக வேண்டுவர். அப்பொழுது கருவேல முட்கள் உணவாகத் தரப்படும். அதனால் வயிறு நிரம்பவும் செய்யாது. அது பசியையும் போக்காது. திரும்ப ஏதும் கேட்பார்கள். அப்பொழுதும் நரகத்தின் உணவாகிய தொண்டையில் சிக்கிக் கொள்ளும் உணவைத் தரப்படும். அது தொண்டையில் சிக்கிக் கொள்ளும். அந்தச் சிக்கலை நீக்குவதற்காக, குடிக்கும் பானங்களைக் கேட்பர். அப்பொழுது நன்கு கொதிக்க வைக்கப்பட்ட நீரை, இரும்புச் சட்டிகளில் ஊற்றி அவர்கள் முன்னால் கொண்டு வரப்படும். அது, அவர்களின் முகத்திற்கு

பொருளடக்கம்

நெருக்கமாக, கொண்டு வரும் பொழுது, அவர்களது முகத்தை பொசுக்கி விடும். பின் அதை அருந்தி, அவர்களின் வயிற்றை அடைந்து விட்டால், வயிற்றின் ஒவ்வொரு பகுதியையும், துகள் துகள்களாக மாற்றிவிடும் என நவின்றார்கள் (மிஷ்காத்)

இது போன்றே, இறைவன் பிறிதொரு இடத்தில், நரகவாதி அருந்தும் நீரைக் குறித்து குறிப்பிடும் போது,

(நரகவாதிகளின் தேகத்திலிருந்து வடியும்) சீழ் தான் அவர்களுக்கு நீராகப் புகட்டப்படும். அதனை அவர்கள் (மிகக் கஷ்டத்தோடு) சிறுக சிறுக விழுங்குவார்கள். எனினும் அது அவர்களுடைய தொண்டையில் இறங்காது. விக்கிக் கொள்ளும் (14:17) எனக் குறிப்பிடுகிறான்.

இந்த வசனத்தைத் தான், நபியவர்கள் ஓதிக் காண்பித்து சீழ் ஜலநீரை, நரகவாதியின் பக்கம் கொண்டு சென்றாலோ, அதைக் கண்டு, முகம் சுளிப்பான். பின் அவன் முக அருகில் கொண்டு சென்றாலோ, அவன் முகத்தை வீங்க வைத்துவிடும். அவனுடைய தலையில் தோல்கள் உருகி, கீழே விழுந்துபடும். அருந்தி விட்டாலோ அவனது குடல்களையெல்லாம் அறுத் தெறிந்து விடும். கடைசியாக மலம் கழிக்கும் வழியாக வெளியாகிவிடும் எனக்கூறி, இவ்வசனத்தை ஓதிக் காண் பித்தார்கள் என அபூஉமாமா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஆக நரகத்தின் உணவோ, தொண்டையில் விக்கிக் கொள்ளக்கூடிய. கசந்த சூடேறிய உணவு. அவ்வுணவின் சிரமத்தை நீக்க - அதற்கு தரப்படுகின்ற நீர், சீழ் ஜல நீராயினும், அல்லது காய்ந்துருகிய செம்பை - போன்ற நீராயினும், பன்மடங்கு சிரமத்தையும், சிக்கலையும் ஏற்படுத்துவ தோடில்லாமல், பல்வேறு வேதனைகளை, வரவழைத்துக் கொண்டிருக்குமென்றால், நரகத்தைக் குறித்து நாம் என்ன நினைத்து வைத்திருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மேலும் இறைவன் பல இடங்களில், நரகவாதிகள் அருந்தும் நீரைக் குறித்து, தெளிவுபடுத்தும் போது.

நிச்சயமாக, கொதித்துக் காய்ந்திருக்கும் (சீழ் கலந்த) ஜலம் அங்கு அவர்களுக்கு கொடுக்கப்படும் (37:67) என்றும், பிறிதொரு இடத்தில்,

எனவே, அந்த கொதித்த சீழ் ஜலத்தை அவர்கள் சுவைத்துப் பார்க்கட்டும் (38:57) எனவும், வேறொரு இடத்தில்,

கொதிக்கும் நீரையே குடிப்பீர்கள். (அதுவும். அவசர அவசரமாக) தாகித்த ஒட்டகம் குடிப்பதைப் போல, அவர்கள் குடிப்பார்கள் (56:57) எனவும், பிறிதொரு இடத்தில்,

கொதிக்கும் நீரே (நரகவாதிக்கு) விருந்தாகும் (55:93) எனவும், மற்றொரு இடத்தில், அதில் முடிவுறக்காய்ந்த நீரையும், சீழையும் தவிர அவர்கள் (வேறு யாதொரு) குடிப்பையும், குளிர்ச்சியையும், ருசிக்கமாட்டார்கள் (79:26) எனவும் குறிப்பிட்டுக் காட்டுகிறான்.

ஆக, மூன்று விதமான நீர்களை, நரகவாதிகளுக்கு தரப்படுவதைக் குறித்து, இறைவன் இயம்புகிறான். ஒன்று காய்ந்துருகிய செம்பைப் போன்ற நீர், மற்றொன்று கொதிக்கும் நீர். பிறிதொன்று சீழ் ஜலநீர். முந்திய இரண்டு நீர்களும், நரகவாதியின் அருகில் கொண்டு சென்றாலோ முகத்தைப் பொசுக்கி விடும். அருந்தி விட்டாலோ, அவர்களின் குடல்களையெல்லாம் துண்டு துண்டாக ஆக்கிவிடும். அவ்வளவு கடுமையான வெப்பம் நிறைந்த நீர்.

இந்நீருக்கே, அவர்கள் எவ்வளவு வேட்கையோடு இருப்பார் களென்றால், பல நாள் தாகித்துப் போன பாலைவன ஒட்டகம் குடிப்பதைப் போல அவசர அவசரமாக குடிப்பார்கள். இந்த கொதிக்கும் நீர்தான் விருந்தாக அவர்களுக்குப் புகட்டப்படும். அதில் எவ்வித குளிர்ச்சியையும், ருசியையும் பெற்றுக் கொள்ள மாட்டார்கள்.

அதைப் போலத்தான், அவர்களின் சரீரத்திலிருந்து வடியும் சீழ்ஜல நீரும் புகட்டப்படும், அதை அருந்துவதற்கு அவர்கள் முகம் சுளிப்பார்கள். எனினும் அவர்கள், தங்கள் தாகத்தைத் தீர்த்துக் கொள்ள வேறுவழியில்லாமல் அதனை மிகக் கஷ்டத்தோடும், சிறுக சிறுக விழுங்குவார்கள். எனினும் அது அவர்களுடைய தொண்டையில் சீக்கிரம் இறங்காது. விக்கிக் கொள்ளும், இது போன்ற பரிதாப நிலைகளைத்தான் நரகவாதிகள் அடைவர்.

இது மாத்திரம் தானா, இன்னும் பல்வேறு விதமான தண்டனைகளும் காத்திருக்கின்றன. அதைப் பொதுப் படையாக இறைவன், இதைப்போன்ற விதவிதமான வேறு வேதனைகளும் உண்டு (38:58) என சொல்லிக் காட்டுகிறான்.

எனவே நாம் நினைத்துப் பார்த்திராத எடுத்து எழுதிவிட முடியாத இவ்வுலகில் ஆங்காங்கு நடைபெறுவதாக கேள்விப்படுகின்ற கொடுமைகள் கொடூரங்கள் ஆக அனைத்தையும் ஒன்று சேர்த்து ஒட்டு மொத்தமாக பார்த்திட்டாலும் நரகினுடைய கொடுமையை நாவாலோ, பேனாவாலோ இயம்பிவிட முடியாது. எனவே மாதிரிக்காக ஒரு சில வேதனையை மாத்திரம் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறான். அதில் இன்னும் சில வேதனைகளையும் நரகவாதிக்கு இழைக்கப்படுவதைக் குறித்து இறைவனும் அண்ணல் நபியவர்களும் கோடிட்டுக் காண்பிக்கிறார்கள்.

11. நரகவாதிகளுக்கு இழைக்கப்படும் பல்வேறு தண்டனைகள்

இறைவன் திருமறையில் கொதித்துக் கொண்டிருக்கும் நீர் அவர்களுடைய தலைகளின் மீது ஊற்றப்படும் அதனால் அவர்களுடைய வயிறுகளில் இருப்பவைகளும், தோல்களும் கருகிப் போய்விடும். அவர்களுக்காக இரும்பு சம்மட்டி களுண்டு. அவைகளைக் கொண்டு அவர்களை அடிக்கப்படும்

இத்துக்க (கரமான நரக)த்திலிருந்து அவர்கள் வெளிப்படக் கருதி முயற்சிக்கும் போதெல்லாம் அதில் தள்ளப்பட்டு எரிக்கும் (நெருப்பு) வேதனைகளைச் சுவைத்துக் கொண்டிருங்கள் எனக் கூறப்படும் (22-22) எனவும் பிறிதொரு இடத்தில்,

அவர்களுடைய தலைக்குமேல் கொதித்த நீரை ஊற்றி நோவினை செய்யுங்கள் (என்று கூறப்படுவதுடன் அவர்களை நோக்கி, ஏளனமாக) நிச்சயமாக நீங்கள் மிக்க கண்ணியமும், மரியாதையுமுடையவர்கள். ஆதலால் (இவ்வேதனையைச் சிறிது சுவைத்துப் பாருங்கள். நிச்சயமாக இதுதான் நீங்கள் சந்தேகித்துக் கொண்டிருந்தது என்று கூறப்படும் (44:50) எனவும் கோடிட்டுக் காண்பிக்கிறான்.

இந்த இருவசனங்களின் மூலம், நரகவாதிகள் நரகத்தில் பல்வேறுவித வேதனைகளுக்கிடையில் அவர்கள் உணவாக உட்கொள்கின்ற பொருட்களின் மூலமும் பானமாக அருந்துகினிற நீரின் மூலமும், அவர்களின் குடல்கள், மேலும் உடல்களின் உள்ளுறுப்புகள் வெந்து-ரணகளமாகி-செதில் செதில்களாக பிரிந்து மல வழியாக வெளியாகின்ற பரிதாப நிலை போதாதென அவர்களின் தலைக்கு மேல், கொதித்த நன்கு சூடேறிய - காய்ந்த நீரையூற்றி, வேதனை செய்யப் படுகின்ற விபரீத நிலையும் அங்கு ஏற்படுமென்பதையும், அதன் மூலம் உடலின் வெளிப்புறத்தோல்கள் கருகிப் போவதோடு, வயிற்றின் உள்ளே இருப்பவைகளும் கரிந்து போய் விடும் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றான். இதன் மூலம் தலைக்கு மேல் ஊற்றப்படும் வென்னீர், எவ்வளவு கடுமையான சூடு கொண்டதாக இருக்குமென்பதை புரிந்து கொள்ளலாம்.

அத்துடன், இரும்பு சம்மட்டிகளால் அவர்களை அடித்து துன்புறுத்தி, வேதனையின் கடைசி விளிம்பிற்கே அழைத்துச் செல்லப்பட்டு விடுமென்றும், அதனால் அப்பொழுது அவர்கள் அந்நரகிலிருந்து வெளிப்பட முயற்சித்து, அது ஏதும் பலனளிக்காமல், மீண்டும் அந்நரகிலேயே தள்ளப்பட்டு, கரிக்கக் கூடிய நரகநெருப்பின் வேதனையைச் சுவைத்துக்

பொருளடக்கம்

கொண்டிருங்களென, ஏளனமாக சொல்லப்பட்டு, நரகிலேயே காலா காலம் வேதனையை அனுபவிக்க வேண்டிய அவல நிலைக்கு ஆளாக நேரிடும் என்பதனை, தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறான்.

அது மாத்திரமல்ல, இவ்வாறு அவர்களின் தலைக்கு மேல் ஊற்றுகின்ற வெந்நீரால், வெந்து - கரிந்து போவதோடு காரியம் முடிந்து போய் விடாமல் என்றென்றும் வேதனையை அனுபவித்துக் கொண்டிருப்பதற்காக, வெந்து போன தோலை திரும்பத் திரும்ப புதுப்பித்து, பொல்லாத வேதனையை புதுப்பித்துக் கொண்டிருப்பான் என்பதனை இறைவனே பறைசாட்டுகிறான்.

அவர்களுடைய தோல் வெந்து (கரிந்து) போகும் பொழுதெல்லாம், அதை மாற்றி வேறுதோலை புதுப்பித்துக் கொண்டிருப்போம். காரணம், அவர்கள் வேதனையை சுவைத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பதுதான், (4:56) எனக் குறிப்பிடுகிறான்.

ஆக, வேதனை நிரந்தரமாக நடைபெற்றுக் கொண்டே யிருக்கும். இவ்வேதனையெல்லாம் பொதுவாக நரகவாதி களுக்கு நிகழ்ந்துக் கொண்டிருக்கும் வேதனை யாகும்.

ஆனால் வேறு சில குறிப்பிட்ட வேதனைகள், குறிப்பிட்ட தண்டனைகளுக்காக அனுபவித்துக் கொண்டிருப்பர். அதைக் காண்போம்.

12. கல்வியை மறைப்போரின் தண்டனை

கல்வியை மறைப்போரின் தண்டனையைக் குறித்து, நபியவர்கள் நவின்ற போது, யாரிடத்தில் ஏதாவது ஒரு தெரிந்த விஷயம் பற்றி கேட்கப்பட்டு, அது அவருக்கு தெரிந்திருக்க அதை மறைத்து விட்டால், அவரின் வாயில் நெருப்பின்

கடிவாளம் ஒன்று பொருத்தப்படுமென நவின்றார்கள். (மிஷ்காத்)

நெருப்பின் கடிவாளத்தையே வாயில் பொருத்தப்படு மென்றால், நெருப்பின் விழுக்காட்டை விளம்பத் தேவை யில்லை. இப்படியும் சிலரின் வேதனை அங்கு காணக் கிடைக்கும்.

13. செயலற்றவர்களின் தண்டனை

செயலற்றவர்களின் உபதேசம், அதாவது வாய்ப்பந்தல் போட்டவர்கள். ஆனால் செயலில் காட்டமாட்டார்கள். அல்லாஹ் சொன்னான், அவனது தூதர்கள் சொன்னார்கள் என்றெல்லாம் எடுத்தியம்பி - மணிக்கணக்கில் முழங்கு வார்கள். ஆனால் அது அவர்களின் நடத்தையிலோ, செயலிலோ கொஞ்சம் கூட இருக்காது. அத்தகைய செயலில்லாத உபதேசிகள். இவர்களைக் குறித்து, அண்ணல் நபியவர்கள், அறிவுறுத்தியபோது எனக்கு மிஃராஜ் ஏற்பட்ட இரவில், நரகில் சிலரைக் கண்டேன். அவர்களது உதடுகளை நரகக் காவலர்களான மலக்குகள், நெருப்புக் கத்திரிக் கோள்களால் கத்திரிக்கின்றனர். தோழர் ஜிப்ரயீலிடம், இன்னோர் யார் என்று வினவினேன். இவர்களே தங்கள் கூட்டத்தின் மத்தியிலிருந்து அறிஞர்கள், நல்ல காரியங்கள் செய்யுமாறு மனிதர்களுக்கு நல்லுபதேசம் புரிந்துவிட்டு தாங்கள் அவற்றில் அலட்சியமாக இருந்து வந்தவர்கள் என்று பதிலளித்தார்கள். (முஸ்னது)

மேலும் அண்ணல் நபியவர்கள் சுட்டிக்காட்டியிருக் கிறார்கள். நரகில் ஒரு மனிதனின் வயிற்றுக் குடல்கள் வெளி வந்து கிடக்கும். கழுதை செக்கில் சுற்றுவது போல், அவன் அதனை சுற்றி வருவான். அதனைக் கண்ணுறும் மற்றைய நரகவாசிகள், அவன் பால் ஒன்று கூடி மனிதா! நீ நமக்கெல்லாம் நலவை ஏவி தீயதை விட்டு விலக்கிக் கொண்டிருந்தா

பொருளடக்கம்

யல்லவா, உனக்கேன் இக்கதி எனக்கேட்பர். அதற்கவன், ஆம் மெய்தான். நலவைக் கொண்டு ஏவினேன். நான் அதன் பிரகாரம் நடக்கவில்லை. தீயதை விட்டு உங்களைத் தடுத்தேன். ஆனால் அதைச் செய்து கொண் டிருந்தேன் எனக் கூறுவான். (நூல் : புகாரீ - முஸ்லிம்)

இந்த ஹதீஸ்களின் மூலம் செயலில்லாத உபதேசிகள் நரகத்திற்கு செல்வது மாத்திரமில்லாமல், அங்கே அவர்களுக்கு விசேஷமான வேதனைகள் வழங்கப் படுகின்ற கொடுமையைத் தான் அண்ணல் நபியவர்கள் விளக்கு கிறார்கள்.

14. முகஸ்துதியின் தண்டனை

தான் செய்கின்ற நற்செயல்களை பிறருக்கு காட்டு வதற்காக செய்தோரின் தண்டனையும் பயங்கரமானதாக இருக்கும். அதைக் குறித்து அண்ணலவர்கள் ஜுப்புல் ஹுஸ்னு விலிருந்து பாதுகாப்புத் தேடி வாருங்கள் என்றார்கள். அண்ணலின் தோழர்கள் ஜுப்புல் ஹுஸ்னு என்றால் என்ன? என வினவினார்கள். அது நரகத்தில் ஒரு படுகுழி, அப்படுகுழியிலிருந்து நரகமே நானூறு தடவை பாதுகாப்புக் கோருகிறது என்றார்கள். அதில் யார் செல்வர் எனத் தோழர்கள் கேட்டபோது தன்னுடைய நற்செயல்களை பிறருக்குக் காட்டுவதற்காக செய்த வணக்கவாளி என்றார்கள். (திர்மிதி)

15. மதுபானம் அருந்துவோரின் தண்டனை

மதுபானங்கள், அதாவது கள்-சாராயம் பிராந்தி - விஸ்கி போன்ற போதைதரும் பொருட்களை அருந்துவோரின் தண்டனைகளைக் குறிப்பிடும் போது, யாரின் பழக்க வழக்கம் மதுபானம் குடிப்பதாக இருந்து, அதே நிலையில் மரணமெய்தி விட்டால், அல்லாஹு தஆலா அவருக்கு கௌத்தா எனும் ஆற்றிலிருந்து குடிப்பாட்டுவான் என நவின்ற போது தோழர்கள் கௌத்தா ஆறு என்றால் என்ன ஆறு? என விளக்கம் கேட்ட

போது, அது விபச்சாரிகளின் வெட்கஸ்தலத்திலிருந்து வெளிப் படக் கூடிய ஆறாகும் எனக் குறிப்பிட்டார்கள் என அபூமூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் அறிவித்தார்கள். (அஹ்மது)

பிறிதொரு ஹதீஸில் நபியவர்கள், அல்லாஹ் தன் மீது கீழ்வரும் ஒப்பந்தம் செய்துக் கொண்டான். அதாவது, யார் போதை தரும் வஸ்துக்களை சாப்பிடுவார்களோ அவர் களுக்கு மறுமையில், கட்டாயமாக தீனத்துல் கிபாலிலிருந்து குடிப் பாட்டப்படுமென்றார்கள். தோழர்கள் தீனத்துல் கிபால் என்றால் என்ன? என வினவிய போது, நபியவர்கள் நரகவாதிகளின் வியர்வை என்று பதிலளித்தார்கள்.

அதுபோல இன்னுமொரு ஹதீஸில், நபியவர்கள் எனது இறைவன் சத்தியமிட்டுச் சொல்லியிருக்கிறான். அதாவது என் கண்ணியத்தின் மீது சத்தியமாக என்னுடைய அடியார் களில் யாராவது மதுபானம் அருந்துவார்களானால், அவர்களுக்கு அதேயளவு சீழ்ஜலம் குடிப்பாட்டுவேன் எனக்கூறியதாகவும் வந்துள்ளது.

ஆக இவ்வுலகில் மதுபானம் அருந்துவோருக்கு, அவ்வுலகில் தரப்படுகின்ற பானம் என்னவெனில், மேலே சொல்லப்பட்டுள்ள ஹதீஸ்களின் மூலமாக, விபச்சாரிகளின் வெட்கஸ்தலத்திலிருந்து வெளியாகும் அசூசிகள், நரகவாதி களின் வியர்வை, சீழ் ஜலம் என்று தெரியவருகிறது. இம்மூன்றும் ஒன்றுக்கொன்று மிக நெருக்கமானவையாக இருப்பதால் மூன்றின் பொருளும் ஒன்றாகவே கவனிக்கப்படும்.

16. வேறு பல செயல்களின் தண்டனை

அனாதைகளின் பொருளை அக்ரமமாக விழுங்கு வோரைக் குறித்து, அண்ணல் நபியவர்கள், நான் இறைதரிசனத்தின் பொருட்டு, வான் சென்றிருந்த இரவில், நரகில் ஒரு கூட்டத்தினரைக் கண்ணுற்றேன். அவர்களது உதடுகள் ஒட்டகத்தின் உதடுகள் போன்றிருந்தன. அவர்களின்

அத்தகைய உதடுகளை பிடித்திழுத்து, அவர்களது வாயினுள் நெருப்புக்கள் திணிக்கப்படுகிறது. அது அவர்களது வாயினுள் நுழைந்து கீழ் வழியாக வெளியேறுகிறது. இவ்வேதனையைச் செய்வதற்கென்றே சில காவலாளிகள் அவர்கள் மீது சாட்டப்பட்டிருக்கின்றனர். இக்கூட்டத்தினர் யாவர் என ஜிப்ரயீல் (அலை) அவர் களிடம் வினவினேன். இன்னோர் தாம், அனாதைகளின் பொருட்களை அநியாயமாக புசித்தோர். இப்பொழுது வயிறு நிறைய நெருப்பை உண்கின்றனர் என பதிலளித்தார்.

அதுபோல தங்கம், வெள்ளி பாத்திரங்களில் அல்லது தங்கம் வெள்ளி கலந்த பாத்திரங்களில் யாராகிலும் சாப்பிடுவார் களானால், அல்லது அருந்துவார்களானால் அதன் மூலம் அவர்கள் தங்கள் வயிற்றில் நரக நெருப்பையே நிரப்புகிறார்கள் என்று நபியவர்கள் நவின்று சென்றார்கள். (தாரகுத்னி)

அதுபோல பெருமையடித்துத் திரிவோரின் நிலையை குறித்து விளக்கிடும் போது, எறும்பைப் போன்ற வடிவத்தில் எழுப்பப்படுவர். ஆனால் அவர்களின் உருவம் மனிதர் களைப் போன்று தான் இருக்கும். இழிவுகள் நாலாபுறமும் சூழ்ந்துக் கொள்ளும் எனக் குறிப்பிட்டார்கள்.

அதுபோல, உருவம் வடிப்போர் - போட்டோ பிடிப்போரின் நிலையை இயம்பிடும் போது நரகவாதிகளின் தண்டனை களிலேயே மாபெரும் தண்டனை, உருவம் வடிக்கக் கூடியவருக்கு உண்டாகும் தண்டனை என நபியவர்கள் மொழிந்தார்கள். (புகாரீ-முஸ்லிம்)

அதுபோல, தற்கொலை செய்துக் கொள்வோரின் தண்டனையைக் குறித்து குறிப்பிடும் போது, மலை மேலேறி தற்கொலை செய்து கொண்டால் அவர் நரக நெருப்பில் (இருப்பார், அந்நெருப்பில் ஏறிவிழுகின்ற வண்ணம்) இருந்துக் கொண்டிருப்பார். விஷம் மூலம் தற்கொலை செய்து கொண்டால் அவ்விஷம் அவர் கையில் ஆகி அதை நரக நெருப்பிலிட்டு குடித்துக் கொண்டே இருப்பார். இரும்பு

போன்ற பொருட்களின் மூலம் தற்கொலை செய்து கொண்டால் அது அவர் கையில் ஆகி அதை நரக நெருப்பிலிட்டு தன்னுடைய வயிற்றில் குத்திக் கொண்டே இருப்பார் என நபியவர்கள் நவின்றார்கள்.(புகாரி)

அதுபோல புறம்பேசித் திரிவோரின் நிலைமையை நபியவர்கள் நவின்றபோது, நரகத்தில் ஒரு கூட்டம், பித்தளை செம்பு போன்றவைகளாலான நகங்களால் தங்களையே கொத்திக் குதறி சுரண்டிக் கொண்டிருந்ததைக் கண்ணுற்ற நான் இவர்கள் யார் என் ஜிப்ரயீலிடம் வினவிய போது இவர்கள் தான் புறம்பேசித் திரிந்தவர்கள் எனக் குறிப்பிட்டார்கள்.

அதுபோல் நரகில் அதிகம் வேதனைப்படுவோர் பெண்களாக இருப்பது கண்டு நபியவர்கள் நவின்றபோது அதற்கு என்ன காரணம் எனக் கேட்க பெண்கள் தங்களது கணவருக்கு எதிராக நடந்து வருவதாலும் அதிகம் சாபங் களிட்டு வருவதாலும் என பதிலளித்தார்கள். (புகாரீ-முஸ்லிம்)

இதுபோன்று பல தனிப்பட்ட குற்றத்திற்காக தண்டிக்கப் படுகின்ற, விசேஷமான வேதனைகள் பொது வேதனைகளோடு தரப்பட்டுக் கொண்டிருக்கும்.

17. நரகவாதியின் கொடூர வடிவம்

நரக வேதனைகளால் நரகவாதியின் வடிவங்கள் எவ்விதம் அல்லோல கல்லோலப்பட்டு அசிங்கப் படுத்தப்பட்டு அருவருப்பான காட்சியில் அங்கு காணப்படு வார்களென்பதை கீழ்வரும் ஹதீஸ் சுட்டிக் காண்பிக்கிறது.

நரகவாதியில் ஒருவர் நரகத்திலிருந்து வெளியாக்கப் பட்டு உலகிற்கு அனுப்பப்பட்டால் அறுவறுப்பான முகத்தாலும் கெட்ட நாற்றத்தாலும் உலகில் உள்ளோர் இறந்தே போவர் என நபியவர்கள் கூறினார்கள். மேலும் இறைவன் திருமறையில்,

அவர்களுடைய முகங்களை (நரகத்தின்) நெருப்பு பொசுக்கும் (உதடுகளையெல்லாம் வெந்து சுருண்டு) அங்கு

பொருளடக்கம்

அவர்கள் முகம் விகாரப்பட்டவர்களாக இருப்பார்கள். (23-103) என கோடிட்டுக் காட்டுகிறான்.

இதை நபியவர்கள் விவரிக்கையில் நரகவாதியின் முகங்களை நரக நெருப்பு சுட்டு பொசுக்கும். அதன் காரணத்தால் அவன் மேல் உதடு வெந்து வீங்கி தலையின் மத்திய பகுதி வரையிலும் கீழ் உதடு வீங்கி தொப்புள் வரையிலும் தொங்கிக் கொண்டிருக்குமென விளக்க மளித்தார்கள். (திர்மிதி)

மேலும் இறைவன் பிறிதொரு இடத்தில் இருண்ட இரவின் ஒரு பாகம் வந்து சூழ்ந்து கொண்டதைப் போல் அவர்களுடைய முகங்கள் (கறுப்பாக) காணப்படும். (10:27) எனக் கூறுகிறான்.

மேற்கூறப்பட்ட வசனங்கள் - விளக்கங்கள் மூலமாக அவர்களின் முகங்கள் பயங்கர கறுப்பு நிறம் கொண்டதாக பார்க்கவே திகிலையும் அறுவறுப்பையும் அசிங்க நாற்றத்தையும் கொண்டதாக இருக்குமென விளங்கலாம்.

18. நரகவாதியின் கண்ணீர் கதறல்கள்

நரகவாதிகள் நரகத்திற்கு நுழையுமுன் தாங்கள் நரக வாதிகள் தான் என்று தீர்ப்பு வழங்கப்பட்டதற்கு பின் அவர்கள் படுகின்ற பரிதாபங்கள் அவர்கள் அங்கலாய்க் கின்ற கண்ணீர் கதறல்கள் இவைகளையெல்லாம் ஆண்டவன் படம் பிடித்துக் காட்டுகிறான்.

தன்னுடைய இடக்கையில் செயல் பதிவேடு கொடுக்கப் படாதிருக்க வேண்டாமா? என்னுடைய கணக்கையே இன்னதென்று நான் அறியாதிருக்க வேண்டாமா? என்னுடைய பொருள் என்றும் பயனளிக்கவில்லையே, என்னுடைய செல்வாக்கும் என்னைவிட்டு அழிந்து விட்டதே! என்று பிரலாபிப்பான். (69:37) என இறைவன் எடுத்துக் காண்பிக்கிறான். அது மாத்திரமல்ல,

அந்நரகவாதிகள், தாங்கள் திரும்ப இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டால், இறைவன் இட்ட கட்டளையை சிரமேற்று செயல்படுவோம், நாங்கள் நிராகரிக்க மாட்டோம் தாங்கள் முற்றிலும் கட்டுப்பட்ட முழுமையான முஸ்லிம் களாக - முஃமின்களாக ஆகிவிடுவோம் என்றெல்லாம் நரகில் நுழைவதற்கு முன் நரகின் முன்னால் - நிற்க வைக்கப்படும் பொழுது கெஞ்சுவார்கள். கதறுவார்கள். அதை இறைவன் திருமறையில்,

நரக நெருப்பின் முன் அவர்கள் நிறுத்தப்படும் பொழுது (நபியே!) நீர் அவர்களைப் பார்ப்பீராயின் எங்களை (உலகத்திற்கு) திரும்ப அனுப்ப முடியாதா? (அவ்வாறு திரும்ப அனுப்பப்படுமாயின்) எங்கள் இறைவனின் வசனங்களை நாங்கள் பொய்யாக்கவே மாட்டோம். விசுவாசிகளில் ஆகிவிடுவோம் (6:27) என்று அவர்கள் பிரலாபிப்பார்கள்.

அது மாத்திரமல்ல, மறுமை வாழ்க்கைக்காக நன்மையை செய்து அனுப்பியிருக்க வேண்டாமா என்றெல்லாம் சொல்லி புலம்புவார்கள். அப்பொழுது ஏற்படும் அறிவால் என்ன பயன் ஏற்படும்? எதுவும் ஏற்படாது என்பதைக் குறித்து இறைவன்,

அந்நாளில் (பாவிகளுக்காக) நரகம் கொண்டு வரப்படும். அந்நாளில் மனிதனுக்கு நல்லறிவு உதயமாகும் அறிவால் அவனுக்கு என்ன பயன்? என்னுடைய மறுமை வாழ்க்கைக்காக நான் நன்மையைச் செய்து அனுப்பியிருக்க வேண்டாமா? என்று பிரலாபிப்பான் (89:34)

எனவே நரகின் முன் நிறுத்தப்பட்ட நரகவாதிகள், அதிலிருந்து தப்பிக்க பல வழிகளை கையாளுவதற்கு பார்ப்பார்கள். ஆனால் யாதொரு வழியையும் பெற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதை இறைவன் திருமறையில்,

குற்றவாளிகள் நரகத்தைக் காணும் சமயத்தில், நிச்சயமாக அதில் விழுந்து விடுவோம் என்றே அவர்கள் உறுதியாக எண்ணுவார்கள். அவர்கள் அதிலிருந்து தப்ப யாதொரு

வகையும் பெற்றுக் கொள்ள மாட்டார்கள் (18:53) எனக் குறிப்பிட்டுக் காட்டுகிறான்.

எனவே, நரகின் முன் நிறுத்தப்பட்ட நரகவாதிகள், தங்களின் பரிதாப நிலையினால் கண்ணீரும் கம்பலை யுமாக கைபிசைந்து கதறி புலம்பி - காரணங்களை பல கூறி எக்காரணமும் எடுபடாத - ஏற்றுக் கொள்ளப்படாத பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டபின் நரகத்தில் தள்ளப்படுவார்கள்.

நரகத்தில் தள்ளப்பட்ட அவர்கள் அங்காவது ஆனந்தமாக இருப்பார்களா? இதோ இறைவன் சொல்லிக் காட்டுகிறான்.

அவர்(களின் கைகால்)களைக் கட்டி, அதில் மிக்க நெருக்கடியான ஓர் இடத்தில் எறியப்பட்டால், கஷ்டத்தை தாங்க (முடியாமல் மரணத்தைத் தரக்கூடிய) அழிவையே அங்கு அழைப்பார்கள். (ஆகவே அந்நேரத்தில் அவர்களை நோக்கி) இன்றைய தினம் நீங்கள் ஒரு அழிவை மாத்திரம் அழைக்காதீர்கள்; அநேக அழிவுகளை அழைத்துக் கொண்டிருங்கள் எனக் கூறப்படும் (25:14) எனவும் பிறிதொரு இடத்தில்,

அதில் (நரகில்) அவர்கள் திணறித் திணறிக் (கழுதையைப் போல) கதறுவார்கள். மற்றவரின் சப்தமும் அவர்கள் காதில் விழாது (21-100) எனவும் சொல்லிக் காட்டுகிறான். அது மாத்திரமல்ல.

அதில் அவர்கள் பெரும் சப்தமிட்டு எங்களிறைவனே! இதிலிருந்து எங்களை வெளியேற்றிவிடு. நாங்கள் செய்து கொண்டிருந்த தீயவைகள் அல்லாத நற்கருமங்களையே இனி செய்வோம் என்று கூறுவார்கள்; (35:37) வேறொரு இடத்தில்,

எங்களுக்கு பரிந்து பேசுவோர் இன்று யாருமில்லையே எங்கள் மீது அனுதாபமுள்ள உண்மை சிநேகிதனும் இல்லையே. நாம் உலகிற்கு திரும்பிச் செல்வது இருக்கு மாயின், உண்மையான விசுவாசுகளாகி விடுவோம் என்று பிரலாபிப்பார்கள் (26:10)

ஆக இவ்வசனங்களின் மூலம் அவர்கள் நரகில் வீழ்ந்தபின், அவர்கள் அடைகின்ற அவல நிலைகளுக்கு அளவேயிருக்காது என்பதையும் அதனால் அவர்கள் கதறி தேம்பி அழுவதின் மூலம் மற்றவர்களின் சப்தமும் அவர்களின் காதில் ஏறாது என்கின்ற அளவிற்கு அவர்களின் வேதனை உச்சக் கட்டத்தை தாண்டி நிற்கும் என்பதையும் எடுத்துக் காண்பிக்கிறான்.

19. நரகவாதி நுழையும் விதம்

நரகில் தள்ளப்படுகிற அவர்கள், எந்த அலங்கோலத்தில் தள்ளப்படுவார்கள் என்பதை இறைவன் திருமறையில் விரித்துரைக்கும் போது,

குற்றவாளிகளை தாகத்துடன் நரகத்தின் பக்கம் கொண்டு வருவோம். (19:86) எனவும் வேறொரு இடத்தில்.

அவர்களுடைய கழுத்துகளில் சங்கிலிகளுடனும் விலங்கு களுடனும் அவர்கள் (வேதனை செய்ய) இழுத்துக் கொண்டு வரப்பட்டு (முதலில்) கொதிக்கும் நீரிலும் பின்னர் நரகத்திலும் திணிக்கப்படுவார்கள் (40:72) எனவும், மற்றொரு இடத்தில் அவர்களுடைய முன்குடுமிகளையும் கால் களையும் பிடித்திழுக்கப்பட்டு நரகத்தில் எறியப்படும் (54:41) எனவும், பிறிதொரு இடத்தில்,

எவரேனும் தீமை செய்தால், அவர்கள் நரகத்தில் முகங்குப்புறத் தள்ளப்படுவர் (27:90) எனவும் இவ்வாறு பல வசனங்களின் மூலம் விவரித்துக் காட்டுகிறான்.

எனவே நரகத்தில் புகுதும் போது எவ்வளவு அவல நிலையான கோலத்தில் அங்கே நுழைகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம். அதாவது நரகவாதிகள் தாகித்த நிலையில் அவர்களுக்கு விலங்குகள் பூட்டி முன் குடுமி களையும் கால்களையும் பிடித்திழுக்கப்பட்டு முகங்குப்புறத் தள்ளப்பட்டு அப்படித் தள்ளப்படுகிற சமயத்திலும் அவர்களைப் பார்த்து ஏளனமாக நீங்கள் பொய்ப்படுத்திக் கொண்டிருந்த நரகம்

இதுதான். (52:16) அதில் நுழைந்து அதன் நெருப்பை கவைத்துப் பாருங்கள். இதை சுவைத்துப் பார்ப்பதில், நீங்கள் பொறுமையைக் கையாண்டாலும், அல்லது பொறுக்க முடியாமல் போனாலும், இரண்டும் உங்களுக்குச் சமமே. எனவே நரகத்தின் வேதனையில் ஒரு அணுவளவும் குறைக்க முடியாது என்கின்ற பயங்கர எச்சரிக்கையோடு நரகத்தின் மத்தியில் இவர்களை இழுத்துச் செல்லுங்கள் என்கின்ற ஆணையோடு அவர்களை நரகத்திற்கு அனுப்பி வைக்கப் படும், இதனைத் தான் அவ்வாறு நமக்கு தெளிவு படுத்துகின்றான்.

இது மாத்திரம்தானா, அவர்கள் நரகத்தில் - நுழைந்து, தனது தேகங்களெல்லாம் ரணகளமாக மாறி - அவதிப் படுகின்ற அலங்கோலமான - அவல நிலைகளெல்லாம் போதாதென, அவர்களுடைய உள்ளத்திற்கும் வேதனை தரவேண்டு மென்பதற்காக, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதைப் போல் அங்கு நரகத்தில் காவலுக்கு நிற்கும் காவலாளிகள் அவர்களைப் பார்த்து கேட்கும் கேள்விகளும், சொற்களும், அவர்களது உள்ளத்தை மேலும் சல்லடையாக்கி - சங்கடத்தை சதாவும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் என்பதை இறைவனின் கூற்றுகள் மூலம் விளங்கலாம்.

20. நரக காவலாளிகள் தரும் தாக்குதல்கள்

நீங்கள் பொய்ப்படுத்திக் கொண்டிருந்த நரக- வேதனையை சுவைத்துப் பாருங்கள் எனவும், பிறிதொரு இடத்தில்,

நீங்கள் உலகில் ஜீவித்திருந்த காலத்தில், நீங்கள் உங்களுடைய நல்லவைகளை யெல்லாம் நன்மையான காரியங்களில் உபயோகிக்காது, உங்களுடைய சுக போகங்களில் உபயோகித்து, வீணாக்கி, அதில் இன்பம் அனுபவித்து விட்டீர்கள். ஆகவே நீங்கள் பூமியில் நியாயமின்றி பெருமையடித்துக் கொண்டும், பாவம் செய்துக் கொண்டும், இருந்ததன் காரணமாக, இழிவு தரும் வேதனையையே

இன்றைய தினம் நீங்கள் கூலியாக கொடுக்கப்படுகிறீர்கள் (46:20) என்றும், வேறொரு இடத்தில்,

அதன் காவலர், அவர்களை நோக்கி, உங்களிலிருந்து அல்லாஹ்வின் தூதர்கள் உங்களிடம் வரவில்லையா? உங்கள் இறைவனுடைய வசனங்களை உங்களுக்கு ஓதிக் காண்பிக்க வில்லையா? இந்நாளை நீங்கள் சந்திக்க வேண்டியதைப் பற்றி அவர்கள் உங்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்ய வில்லையா? என்று கேட்பார்கள். அதற்கவர்கள் ஆம் (வந்தார்கள்) என்றே சொல்லுவார்கள். (39:70) அதன் பின் நரகத்தின் வாயில்களில் நுழைந்து - என்றென்றும் அதில் தங்கி விடுங்கள் (39:73) என கூறப்பட்டு விடுமென்றும், பிறிதொரு இடத்தில்,

நீங்கள் பொய்யாக்கிக் கொண்டிருந்த நரகநெருப்பு இதுதான். இது வெறும் சூனியந்தானா அல்லது இதனை நீங்கள் கண்ணால் பார்க்கவில்லையா? இதில் நுழைந்து விடுங்கள். இதன் வேதனையை பொறுத்துக் கொள்ளுங்கள், அல்லது பொறுக்காதிருந்து விட்டுப் போங்கள், இரண்டும் உங்களுக்குச் சமமே. நீங்கள் செய்தவைகளுக்குரிய கூலிதான் உங்களுக்குக் கொடுக்கப்படுகிறது (52:16) என்றும், வேறொரு இடத்தில்,

அல்லாஹ்வையன்றி நீங்கள் அவனுக்கு இணையாக்கிக் கொண்டிருந்தவை எங்கே? (40:73) என்றும், நரகநெருப்பு பொசுக்குவதை சுவைத்துப் பாருங்கள் (55:48) எனவும். இவ்வாறு பல இடங்களில் நரகவாதிகளைப் பார்த்து காவலர்கள் கேட்பதைச் சொல்லிக் காட்டுகிறான்.

இவைகளையெல்லாம் கேட்ட நரகவாதிகள், தங்களுக்கு ஆறுதல் வார்த்தையே கிடையாதா! தங்களது உடலுக்குத் தான் வேதனையென்றால் இவர்களில் கேள்விக் கணை களால் எங்களது உள்ளத்திற்கும் வேதனைதர வேண்டுமா என வெந்தணலில் வீழ்ந்த புழு துடிப்பதைப் போல வீழ்ந்து துடிப்பார்கள்.

இவைகளுக்கெல்லாம் என்ன காரணம்? யார் காரணம்? நம்மை வழிகெடுத்த ஷைத்தானும், நமது வழிகெட்ட தலைவர்களுமல்லவா என எண்ணிப் பார்த்து அவர்களின் மீது எரிந்து விழுவார்கள். அந்தக் காட்சியை ஆண்டவனே படம் பிடித்துக் காட்டுகிறான் இதோ.

21. ஷைத்தானுடன் உரையாடல்

நரகவாதிகள் நரகத்திற்கு வருவதற்கு காரணஸ்தர்களாக இருந்தது ஷைத்தானும் வழிகெட்ட தலைவர்களுமல்லவா? அவர்கள் காட்டிய பாதையில் நடைபோட்டதல்லவா? அவர்கள் இறைவனைப் பற்றியோ மறுமை நாளைப் பற்றியோ சுவர்க்க - நரகத்தைப் பற்றியோ மறுத்தும் திரித்தும் கருத்துக்களை வெளியிட்டு தங்களது கருத்துக்களுக்கு கட்டுப்பட வைத்தவர்கள் அல்லவா? எனவே அத்தகையோர் மீது ஆத்திரம் கொண்டு, யா இறைவா! எங்களை வழிகெடுத்தவர்கள் இவர்கள் தாம். ஆகவே அவர்களுக்கு எங்களை விட இரு மடங்கு நரகவேதனை கொடுப்பாயாக என்று கனல் கக்கும் கண்களோடு கண்டன மழை பொழிவார்கள். அதை இறைவன் திருமறையில் கூறும்போது,

எங்களது இறைவா! இவர்கள் தாம் எங்களை வழிகெடுத்தவர்கள். ஆகவே அவர்களுக்கு எங்களைவிட இருமடங்கு நரகவேதனை கொடுப்பாயாக (7 : 38) என சுட்டிக் காட்டுகிறான்.

அதற்கு அந்த ஷைத்தான், நான் உங்களை அழைத்தேன், நீங்கள் என்னைப் பின்பற்றினீர்கள் என்பதைத் தவிர நான் உங்களை நிர்ப்பந்திப்பதற்கு எனக்கு யாதோர் அதிகாரமும் இல்லாமல் இருந்தது. ஆதலால் நீங்கள் என்னை நிந்திக்காதீர்கள். உங்களையே நீங்கள் நிந்தித்துக் கொள்ளுங்கள். நான் உங்களுக்கு யாதோர் உதவியும் செய்ய முடியாது. நீங்களும் எனக்கு யாதோர் உதவியும் செய்ய முடியாது எனக் கூறி விடுவான். (14 : 22)

அது மாத்திரமல்ல, இறைவனிடத்திலும் இந்த வாக்கு மூலத்தை யா அல்லாஹ்! இவர்களை வழிகெடுத்தது உண்மைதான். ஆனால் நிர்பந்தித்து நான் வழிகெடுக்க வில்லை. இவர்களே பாரதூரமான வழிகேட்டிலே வருவதற்கு வரவேற்புவிழா நடத்தினார்கள். எனவே அவர்கள் அதிலிருந்து தங்களை தற்காத்துக் கொள்வதற்கு அதிகாரம் படைத்திருந்தார்கள். எனவே என் மீது பழிபோடுவதற்கு

இவர்களுக்கு வக்கோ - வகையோ, வழியோ கிடையாது எனக் கூறிவிடுவான். இதை இறைவன் திருமறையில்,

எங்கள் இறைவனே! நான் இவனை (நிர்பந்தித்து) வழி கெடுக்கவில்லை. ஆனால் அவனே வெகுதூரமான வழிகேட்டில் சென்று விட்டான், (50 : 77) எனச் சொல்லிக் காட்டுகிறான்.

இந்த வாக்கு வாதங்களையெல்லாம் கேட்ட இறைவன் இதைப் பற்றிய சர்ச்சசையெல்லாம் என்னிடத்தில் வைத்துக் கொள்ளா தீர்கள். நான் ஏற்கனவே இதைக் குறித்து எச்சரித்திருந்தேன். எனவே எனது கட்டளையை மாற்றப்படுவதில்லை. நான் யாருக்கும் அக்கரமம் செய்பவனல்ல என்று கூறி விடுவான். இதை இறைவன் திருமறையில் சுட்டிக் காட்டும்போது,

என் முன்பாக தர்கித்துக் கொண்டிருக்க வேண்டாம். ஏற்கனவே உங்களுக்கு அச்சுறுத்தியிருந்தேன், கட்டளை என் முன்னர் மாற்றப் படுவதில்லை. நான் என்னுடைய அடியார்களுக்கு ஒரு போதும் அக் கரமம் செய்பவனல்ல (50 - 29) என்று சொல்லிக் காட்டுகிறான்.

இதைப் போன்று வழிகெடுத்த தங்களது தலைவர்களோடு நரகத்தில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளையும் இறைவன் சித்தரித்துக் காட்டுகிறான்.

22. தலைவர்களுடன் உரையாடல்

(தலைவர்களை நோக்கி) இந்தக் கூட்டத்தாரும் உங்களுடன் (நரகத்தில்) தள்ளப்படுவார்கள் (19 : 59) என்று கூறப்படும்.

அதாவது தலைவர்களைப் பின்பற்றி வழிகெட்டுப்போன தொண்டர்களையும், சீடர்களையும் நரகத்தில் அந்த தலைவர் களோடு தள்ளப்படும் என்பதை குறிப்பிட்டுக் காண்பிக்கிறான். இதைக்கேட்ட அத்தலைவர்கள்,

இது அவர்களுக்கு நல் வரவல்ல. நிச்சயமாக அவர்கள் நரகம் செல்பவர்களே (39 : 59) என்று கூறிவிடுவார்கள். இதைக் கேட்ட அவர்களைப் பின்பற்றியவர்கள்,

(அவர்களை நோக்கி) எங்களுக்கன்று, உங்களுக்குத் தான் நல்வரவில்லை. நீங்கள் தாம் எங்களுக்கு இதனைத் தேடித்

தந்தீர்கள். (ஆதலால் நம்மிருசாராரின்) தங்குமிடம் மகாகெட்டது என்று கூறுவார்கள். (39 : 59)

அத்துடன் மாத்திரம் நின்றுவிடாமல், இறைவனிடத்திலும் நாங்கள் நரகிற்கு வர காரணஸ்தர்களாக இருந்தவர்களுக்கு இரட்டிப் பான வேதனையை வழங்குவாயாக என முறையிடுவார்கள். அதை இறைவன் திருமறையில்,

எங்களிறைவனே! எவன் இதனை எங்களுக்கு தேடி வைத்தானோ அவனுக்கு, நரகத்தில் வேதனையை இரு மடங்கு அதிகப்படுத்து (36 : 67) என்று பிரார்த்திப்பார்கள்.

ஆக அனைவருக்குமே நரகத்தில் இரட்டிப்பான வேதனைக் காத்திருக்கிறது என்பதை இறைவன் திருமறையில் பின்வருமாறு ஒவ்வொருவருக்கும் இரட்டிப்பான வேதனை இருக்கிறது. ஆனால் நீங்கள் அறியமாட்டீர்கள் (7 : 38)

எனவே வேதனையில் சிக்குண்டு, வெந்து சாகும் நரகவாதிகள் தங்களது பெருமையடித்துத் திரிந்த, வழி கெடுத்த தலைவர்களை பரிதாபத்தோடு பார்த்து அடப்பாவிகளே! நாங்கள் வழிகெட்டுப் போவதற்கு உங்களைப் பின்பற்றிய தல்லவா காரணம், இன்றைய தினம் இந்நரகத்தின் வேதனையில் ஒரு சிறிதளவேனும் எங்களை விட்டுத் தடுத்துவிட உங்களால் முடியுமா? உலகிலே நீங்கள் ஏதேதோ பிதற்றிக் கொண்டு - பெருமையடித்துக் கொண்டு - எங்களை யாரும் எதுவும் செய்துவிட முடியாது எனச் சொல்லிக் கொண்டு - எங்களுக்கு அதுபோன்ற வாக்குறுதிகளையெல்லாம் வழங்கி வீணடித்துக் கொண்டிருந்தீர்களே, இன்று பாழும் கிணற்றில் விழச் செய்து பரிதவிக்க விட்டிருக்கிறீர்கள், உங்களால் சிறிதளவாவது வேதனையை வேலி போட்டு தடுத்து நிறுத்தி இருக்க முடியாதா? என்று பரிதாபத்தோடு அத்தலைவர்களை நோக்கி வினா எழுப்புவார்கள். இதனை இறைவ ன் திருமறையில்,

நிச்சயமாக நாங்கள் உங்களையே பின்பற்றி இருந்தோம். ஆகவே, அல்லாஹ்வின் வேதனையிலிருந்து ஒரு சிறிதளவேனும் எங்களை விட்டு நீங்கள் தடுத்துவிட வேண்டாமா? என்று கேட்பார்கள் எனக் குறிப்பிட்டுக் காட்டுகிறான்.

அதற்கு அவர்கள் தருகின்ற பதில் என்ன தெரியுமா? (வேதனையிலிருந்து தப்பித்துக் கொள்ள) அல்லாஹ் எங்களுக்கு யாதொரு வழி வைத்திருந்தால் (அதனை) நாங்கள் உங்களுக்கு அறிவித்திருப்போம். (தப்ப வழியில்லை. எங்கள் வேதனையைப் பற்றி) நாங்கள் பதைபதைத்து துடிதுடிப்பதும் அல்லது (அதனை சகித்துக் கொண்டு) பொறுத்திருப்பதும், எங்களுக்கு ஒன்றாகவே இருக்கிறது. (இவ்வேதனையிலிருந்து) தப்ப, எங்களுக்கு யாதொரு வழியுமில்லை என்று கூறி கை,விரித்து விடுவார்கள்.

இதனால் ஆத்திரம் கொண்ட நரகவாசிகள், ஆவேசத்துடன், இறைவனை நோக்கி, எங்களது இறைவா! எங்களை வழி கெடுத்த தலைவர்களாகிய மனிதர்களையும் - ஜின்களையும் ஷைத்தான்களையும் எங்களுக்குக் காண்பி. அவர்களை எங்களது கால்களுக்கு கீழாக்கி துவைத்து - மிதித்து இழிவுபடுத்தி - சின்னாபின்னமாக ஆக்கி விடுகிறோம் என (ஆர்ப்பரிக்கும் அலைகடல் போன்று) அனல் பறக்கும் கண்களோடு ஆத்திரம் கொண்டு வீறிட்டெழுவார்கள், என்பதினை இறைவன் திருமறையில் கோடிட்டுக் காட்டுகிறான்.

23. நரகவாதி காவலர்களிடத்தில் முறையிடுதல்

நரகில் வீழ்ந்துபட்ட நரகவாதிகள், தங்களது வேதனையிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கு, தாங்கள் உலகில் நம்பி வணங்கிவந்த வீண் தெய்வங்களையெல்லாம் - ஏற்றம் பெறலாம் என நம்பிவந்த போலித் தலைவர்களையெல்லாம் - உள்ளும், வெளியும் இருந்து வழிகெடுத்த ஷைத்தான்களையெல்லாம், உதவிக்கு அழைத்துப் பார்த்து அவைகளெல்லாம் தன்னால் உதவி செய்ய இயலாத கையாலாகாததனத்தை காட்டி - காலைவாரி விட்டு கைவிரித்து விட்டு போகின்ற கோர காட்சியைக் கண்டதற்குப் பின், கடைசியாக அங்கு காவலுக்கு நிற்கின்ற காவலாளிகளிடத்தில் முறையிட்டு, தங்களுடைய பரிதாப நிலையை போக்குதற்கு, உங்களுடைய இறைவனிடத்தில் எங்களுக்காக வேதனையை குறைக்குமாறு நீங்கள் வேண்டக் கூடாதா? என்று கூனிக் குறுகிப்போய் - குமுறுகின்ற உள்ளத்தோடு அணுகுவார்கள். அதை இறைவன்,

"வேதனையை ஒரு நாளேனும் எங்களுக்கு லேசாக்கு மாறு உங்கள் இறைவனிடம் நீங்கள் கேளுங்கள் எனக் கூறுவர். அதற்கு அக்காவலாளிகள் கூறும் பதில் என்ன தெரியுமா? உங்களிடம் வந்த தூதர்கள், தெளிவான அத்தாட்சிகளுடன் உங்களிடம் வரவில்லை யாயெனக் கேட்பார்கள். அதற்கு அந் நரகவாதிகள் ஆம், உண்மைதான் வந்தார்கள். நாங்கள் தான் அவர்களை நம்பினோமில்லை. நாட்டிலே இருந்த வேறு சிலரை நம்பி, நாசம் செய்து மோசம் போய்விட்டோம் என்று முறையிடுவார்கள். அதற்கு அக்காவலாளிகள் அவ்வாறாயின் நாங்கள் இறைவனிடம் கேட்பதற்கில்லை. நீங்கள் கேட்டுக் கொள்ளுங்கள் என்று (40 : 50) கூறிவிடுவார்கள்.

நரகவாதிகளாகிய அவர்கள் நேரடியாக இறைவனிடத்தில் வேண்டி மண்டியிட்டாலும் அவர்களின் கோரிக்கை நிறைவேறாது. மாறாக அதுவே அவர்களுக்குத் தீங்கிழைப்பதாக மாறிவிடும். இதைத்தான் இறைவன் இந்நிராகரிப்போரின் பிரார்த்தனை தீமையை அன்றி (நன்மையைத்) தராது, (40 : 50) என்று சொல்லிக் காட்டுகிறான்.

எனவே நரகத்தில் அனைத்துத் தரப்புகளிடத்திலும் முறையிட்டு, எல்லோரிடமிருந்தும் புறக்கணிக்கப்பட்டு - புலம்பிபோய் புண்மை தேரைகளாய் - புழுக்களாய் துடித்து பதறுகின்ற பரிதாபக் காட்சிதான் கடைசியில் மிஞ்சி எஞ்சி நிற்கும். எனவே இத்தகைய கண்றாவி காட்சிகளெல்லாம் நிறுத்தப்பட்டு அதற்கு ஒரு முடிவு ஏற்பட, மரணத்தை அழைத்து, அதன் மூலமாவது விடுதலை கிடைக் கட்டுமே என்று நரகவாதிகள் ஏங்கி, அத்தகைய எண்ணத்திற்கு ஆசைப்பட்டு, அங்கே நிற்கும் காவலாளிகளின் அதிபதியாகிய மாலிக்கே! எங்களுக்கு விடுதலை கிடைப்பதற்கு, மரணத்தின் மூலமாவது எங்களது காரியத்தை இறைவன் நிறைவு செய்யட்டுமே, அதன் மூலமாவது வேதனைகள் எங்களை விட்டு விலகி விடைபெறட்டுமே, நாங்கள் குற்றுயிரும் - கொலை உயிருமாக கிடந்து பல இன்னல்களுக்கு ஆளாகுவானேன்? ஒரேடியாக மரணம் எங்களை வந்து தழுவிக் கொள்ளட்டுமே, என்று தழுதழுத்த குரலில் தாங்க முடியா வேதனையோடு விளம்புவார்கள்.

அதைத்தான் இறைவன் சொல்லிக் காட்டுகிறான் :

மாலிக்கே! உமதிறைவன் எங்களுடைய காரியத்தை முடித்து விடட்டும் என்று சப்தமிடுவார்கள். (43 : 77)

அதற்கு அந்த அதிபதி கூறும் பதிலென்ன தெரியுமா? அதற்கு அவர் (முடியாது) நிச்சயமாக நீங்கள் (இதே நிலைமையில் வேதனையை அனுபவித்துக் கொண்டே மரிக்காது) நிலைத்திருக்க வேண்டியது தான் என்று கூறிவிடுவார். (43 : 77) அதாவது மரணம் என்பதே நரகில் கிடையாது. இப்படியே வேதனையை அனுபவித்துக் கொண்டு காலாகாலத்திற்கு நிலைத்திருக்க வேண்டிய நிலை தான். முடிவு என்பதே கிடையாது எனக் கூறி விடுவார்கள்.

எனவே அவர்கள் தங்களின் பரிதாப நிலையை நினைத்து கண்ணீர் வடித்து கண்களெல்லாம் கால்வாய்களாக மாறி கண்ணீரும் தீர்ந்து போய் - பின் குருதிகள் பெருக்கெடுத்து புண்களாக உருமாறிவிடும் என்று அண்ணலெம் பெருமானார் அவர்கள் சொல்லிக் காட்டியிருக்கிறார்கள்.

இப்படி ஓராயிரம் ஆண்டு கழிந்ததற்குப் பின், நரகத்தின் அதிபதி மாலிக் என்பவர் உள்ளம் இரங்கிப் போய் - பரிதாப்பட்டு பச்சாதாபத் தோடு நரகவாதிகளை நோக்கி. வாருங்கள், இறைவனிடத்தில் முறையிட்டுப் பார்ப்போம். அவனைத் தவிர்த்து இவ்வேதனையை தீர்க்க யார் உளர் என உருகிய உள்ளத்தோடு கேட்டுக் கொள்வார்.

எனவே நரகவாதிகள் தங்கள் இறைவனிடத்தில் எங்களிறைவனே! எங்களுடைய துரதிருஷ்டம், எங்களை மீறி விட்டது. ஆதலால் நாங்கள் தவறான வழியில் சென்று விட்டோம். எங்களிறைவனே! இந்நரகிலிருந்து எங்களை வெளிப்படுத்திவிடு. அதன் பின்னும் பாபஞ்செய்ய முற்பட்டால் நாங்கள் மகா அக்ரமக்காரர்களாகி விடுவோம். (20 : 107) என முறையிடுவார்கள்.

ஆனால் அதற்கு இறைவன் கூறும் பதிலென்ன தெரியுமா?

அதிலேயே கேவலப்பட்டு கிடங்கள். நீங்கள் என்னுடன் பேசாதீர்கள் என்று கூறிவிடுவான். (23 : 108)

இந்தப் பதிலைக் கேட்ட நரகவாதிகள் கோவென கதறி அழுது கழுதையைப் போல் கத்திக் கொண்டு, எங்களின் பாவங்களை மன்னித்து, ஆதரவு காட்டி, அணைக்க வேண்டிய ஆண்டவனே,

என்னிடம் பேசாதீர்கள் என்று கடுங் கோபத்துடன் கூறிவிட்டானே, இனி யாரிடம் முறையிடுவது? என புலம்பிக் கொண்டு, கைசேதத்தின் கடைசி எல்லைக்கே சென்று விடுவார்கள்.

அன்பர்களே! இந்தக் கோரக் காட்சியை நமது மனக் கண்முன் கொண்டு வந்து நிறுத்தி நிதானமாக சிந்தித்துப் பாருங்கள். இந்த நிலை நமக்கு ஏற்பட்டு விடுமானால் (ஆண்டவன் அதை விட்டும் காப்பாற்றுவானாக) நமது நிலை எப்படியிருக்கும்? அருள் செய்கிறானோ இல்லையோ, ஆனால் முறையீட்டைக் கூட கேட்கத் தயாராக இல்லை என்று அறிவிக்கிறான் என்றால், இந்த உலகம் தான் வாழ்க்கை என்று நம்பி, அந்த வாழ்க்கையை தான் தோன்றி தனமாக தனக்கேயுரிய பாணியில் அமைத்துக் கொண்டு, அல்லாஹ் அவனது தூதரும் அறிவித்த வழிமுறைகளையெல்லாம் ஆழகுழிதோண்டி - நீளபுதைத்து விட்டு - ஆனந்தமாக வலம் வந்து கொண்டிருக்கிறோமே, என்ன! நாம் இன்று கிடைக்கவிருக்கின்ற, குறுகிய கால பலனை இழக்கப் போகிறோமா என்பதை எண்ணிப் பார்த்திடல் வேண்டும். அல்லது நாம் என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறோம்! இந்த உலகிலே, நம்முடைய காரியங்கள் - நமக்குச் சாதகமாக நடைபெற வேண்டுமென்பதற்காக, அது பாதகமாக இருந்தாலும் நாம் இங்கே ஆட்களையே - அதிகாரிகளையே - அந்த அதிகாரிகளை ஆட்டிப்படைக்கின்ற அரசியல் வாதிகளையே நமது கைக்குள் போட்டுக் கொண்டு, கையூட்டுத் தொகை தந்து காரியமாற்றிக் கொண்டிருக்கிறோமே, அப்படி ஏதாவது செய்து கொள்ளலா மென நினைத்துக் கொண்டிருக்கிறோமா, இவையெல்லாம் அங்கிருக்காது. அதுவும் ஒரு நபருக்கு இவ்வளவு இருக்க முடியாது. அத்தகைய நினைவு இருக்குமானால் அந்த நினைப்பு - எத்தகைய நினைப்பு என்பதை அல்லாஹ் சொல்லிக் காட்டுவதைப் பாருங்கள்.

குற்றவாளி, அந்நாளுடைய வேதனைக்குப் பகரமாக தன்னுடைய மக்களையும், தன்னுடைய மனைவிகளையும், தன்னுடைய சகோதரர்களையும். தான் ஆதரித்து வந்த தன்னுடைய சொந்தக்காரர்களையும், இன்னும் பூமியிலுள்ள யாவையுமே கொடுத்தேனும் தப்பித்துக் கொள்ள விரும்புவான் (எனினும் அது). ஆகக்கூடிய காரியமல்ல (70 : 15) என்று சொல்லிக் காட்டுகிறான்.

அது மாத்திரமல்ல; பிறிதொரு இடத்தில்,

அவர்களுக்கு இப்பூமியில் உள்ள யாவும் இருந்து, அத்துடன் அதைப் போன்ற ஒரு பாகமும் இருந்து அவர்கள் இவை யாவையும் மறுமை நாளில் படும் வேதனைக்கு பிரதியாக கொடுத்தாலும் அவர்களிடமிருந்து அது அங்கீகரிக்கப்பட மாட்டாது என்று (5 : 36) சொல்லிக் காட்டுகிறான்.

எனவே, தான் படுகின்ற வேதனையிலிருந்து தப்பித்துக் கொள்ள, உலகிலுள்ள பொருட்கள், ஏன்? அத்துடன் அதைப் போன்ற இன்னுமொரு பாகம் உலகப் பொருட்களுமிருந்து, இவைகள் எல்லாவற்றையும் தந்து தப்பித்துக் கொள்ளலாமென்றால் கூட முடியாது. சரி இவைகளெல்லாம் அவர்களுக்குக் கிடைக்க வாய்ப்புண்டா என்றால் இவைகளெல்லாம் அங்கிருக்காது. அதுவும் ஒரு நபருக்கு இவ்வளவு இருக்க முடியாது. அப்படியே இருக்கிறது என்று வைத்துக் கொண்டாலும் தப்பித்துக் கொள்ள முடியுமா? என்றால் அறவே முடியாது. ஏனெனில் எது தந்த போதினும் ஏற்கப்பட மாட்டாது என்பதினை தெள்ளத் தெளிவாக இறைவன் தெரியப் படுத்தியதற்குப் பின், நாம் என்ன செய்ய போகிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

எனவே நாம் அதிலிருந்து தப்புவதற்கு குர்ஆன், ஹதீஸ் இவைகளின் வெளிச்சத்தில், இவ்வுலகில் நற்செயல்கள் செய்ய தயாராக வேண்டும். அதற்கு மாறாக அந்நற் செயல்கள் செய்வோரை அவ்வாறு செய்யுமாறு தூண்டுவோரை பார்த்து பரிகசிக்கின்ற நிலைமை வந்து விடக்கூடாது. ஏனெனில் அவ்வாறு பரிகாசம் செய்து, இறை விசுவாசிகளை கேலியும் கிண்டலும் செய்தவர்கள், நாளை நரகத்தில் அவர்களைப் பார்த்து உண்மை இறைவிசுவாசிகள், இவர்கள் தாம் நம்மை உலகில் கிண்டலும் கேலியும் செய்தவர்கள், இன்று நரகத்தில் வெந்து சாகிறார்கள் என்று சொல்லி, சிரித்து மகிழுகின்ற இனிய காட்சிகளையெல்லாம் இறைவன் இயம்பிக் காட்டுகிறான்.

அன்றைய தினம் விசுவாசம் கொண்டவர்கள். அந்நிராகரிப் போரைக் கண்டு சிரிப்பார்கள். (83 : 36)

24. நரகவாதி - சுவனவாதி உரையாடல்

சுவனவாசிகள், நரகவாசிகளை நோக்கி, எங்களிறைவன் எங்களுக்களித்த வாக்குறுதிகளை நாங்கள் நிச்சயமாக பெற்றுக் கொண்டோம். நீங்கள் உங்களிறைவன் உங்களுக்களித்த வாக்குறுதிகளை உண்மையாகவே பெற்றுக் கொண்டீர்களா? என்று (சப்தமிட்டுக்) கேட்பார்கள். அதற்கவர்கள், ஆம் (பெற்றுக் கொண்டோம்) என்று கூறுவார்கள். அப்பொழுது ஒரு அறிவிப்பாளர் அவர்களுக்கு மத்தியில் நிச்சயமாக அல்லாஹ்வுடைய சாபம் அக்கிரமக்காரர்கள் மீது உண்டாவதாக என்று கூறுவார் (7 : 44) எனச் சொல்லிக் காட்டுகிறான், அது மாத்திரமல்ல, பிறிதொரு இடத்தில்,

நல்லோர்கள் சுவனபதியில் இருந்து கொண்டு, உங்களை நரகத்தில் புகுத்தியது எது? என்று குற்றவாளிகளை நோக்கி கேட்பார்கள். அதற்கவர்கள், நாங்கள் தொழுதவர்களாக இருக்கவில்லை. நாங்கள் ஏழை எளியோருக்கு ஆகாரமளிக்க வில்லை. வீணான காரியங்களில் மூழ்கிக் கிடந்தவர்களுடன் நாங்களும் மூழ்கிக் கிடந்தோம் (நாங்கள் மரித்து) இதனை உறுதியாகக் காணும் வரையில் (இவ்வாறே இருந்தோம்) என்றும் கூறுவார்கள். (74 : 47) என்று நரகவாதிகள் தாங்கள் நரகிற்கு வந்த காரணத்தை அடுக்கிக் காட்டுவார்கள் எனச் சொல்கிறான்.

அன்பர்களே! நரகவாதிகளாகிய அவர்கள் காட்டுகின்ற காரணங்கள் எதுவென்று புரிகிறதா? தொழுகையை விடுதல், ஏழைகளை பராமரிக்காதிருத்தல், வீணான காரியங்களில் மூழ்கி தான் தோன்றித்தனமாக நடத்தல், கூலி கொடுக்கும் நாளாகிய மறுமை நாளை நம்பாதிருத்தல் போன்ற காரியங்களே அவர்களை நரகிற்கு இழுத்து வந்தன என்று வாக்கு மூலங்கள் தருவார்களென இறைவன் இறைமறையில் சுட்டிக் காட்டிய பின்பும் அதைக் குறித்து நாம் நரகத்தை வசந்தம் குலுங்கும் பூஞ்சோலையென்று எண்ணிக் கொண்டிருக்கிறோமா? இதோ அந்த நரகவாதிகளே அழைத்து தாங்கள் படும் கொடுமையை எடுத்துச் சொல்வதை கொஞ்சம் நினைவிலே கொள்வோமானால் அது பூஞ்சோலையா - அல்லது கொதிக்கும் தார்ச்சாலையா என்பது விளங்கி வரும்.

நரகவாசிகள் சுவனவாசிகளை நோக்[illegible] மீது சிறிது நீரைக் கொட்டுங்கள், அல்லது இறைவன் [illegible]களுக்குப் புசிக்க அளித்திருப்பவற்றில் ஒரு சிறிதேனும் [illegible]ளுக்குத் தாருங்கள் என்று கெஞ்சிக் கேட்பார்கள். அதற்கவர்கள் நிச்சயமாக அல்லாஹ், உங்களைப் போன்று நிராகரிப்போருக்கு இவ்விரண்டையும் தடுத்து விட்டான். (7 - 50) என்று பதிலளிப்பார்கள் எனச் சொல்லிக் காட்டுகிறான்.

இந்த வசனத்தின் மூலம் அவர்களுக்குக் கிடைக்கின்ற பதில் அவர்களுடைய பரிதாபத்திற்கு பரிவு காட்டுவதாகவோ அல்லது மருந்து தடவுவதாகவோ அமையாது என்பதைத் தான் அந்த நேரடி பேட்டியின் மூலம் புலப்படுத்துகிறான்.

முடிவுரை

இதுவரை தாங்கள் படித்து வந்த நரகம், நரகவாதிகளின் நிலைமைகள், வேகவேகமாக படித்துவிட்டு அலமாரியில் அடுக்கி வைத்து - அழகு பார்த்து ரசிப்பதற்கல்ல, அல்லது மற்ற சம்பவங்கள் நிகழ்ச்சிகளைப் போன்று, படித்து முடித்ததும் மறந்து விடுவதற்குமல்ல.

உண்மையில், மேல் சொல்லப்பட்ட சம்பவங்கள். நிகழ்ச்சிகள் அனைத்தும், குர்ஆன் ஹதீஸிலிருந்து அடுக்கித் தரப்பட்ட சந்தேகத்திற்கிடமில்லாத - உண்மை நிகழ்ச்சிகளாகும். எனவே இதை அடிக்கடி படிப்பதின் மூலம், தனது வாழ்க்கையை மிக லேசாக திருப்பி, நரகத்திலிருந்து தன்னை தற்காத்து - நேரான - நன்மையின் பாதைக்கு அழைத்துச் செல்ல முடியும் என்ற நம்பிக்கையிருக்கிறது.

எனவே நரகத்தின் சிந்தனைகள் நமது கவனத்திலிருக்குமானால், இவ்வுலக விவகாரங்களிலேயே மூழ்கி பணம், பதவி போன்றவை களை திரட்டுவதையே தனது தணியாத தாகம் எனக்கருதி வீணான வழிகளில் பெரும் பெரும் பாவங்களை சம்பாதித்து, மறுமையை அழித்துக் கொள்ள முனைவார்களா? நரகத்தின் பசி பற்றி தெரிந்தவர்கள் நோன்பு விடுவதற்கு முயற்சிப்பார்களா? நரகத்தின் கொடுமையின் கொடூரத்தை அறிந்தவர்கள். சிறு சிறு இன்ப

சுகங்களுக்காக தொழுகையையே தூக்கி எறிவார்களா? நரகத்தின் விதவிதமான வேதனையின் வன்கொடுமைகள் பற்றி புரிந்தோர், இறையோனின் அச்சத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, நடக்க முற்படுவார்களா? ஒருபோதும் அவ்வாறு செய்யமாட்டார்கள்.

ஆனால் உண்மை நிலை என்னவெனில் நரகம் - சுவர்க்கம் என்பதெல்லாம், உள்ளத்தின் ஆழ்பகுதி வரை ஊடுருவச் செய்யாமல், வெறும் வார்த்தையளவில் வைத்துக் கொண்டது தான் இவைகளுக்கெல்லாம் காரணம்.

எனவே நரகத்தின் நிலைமை பற்றித் தெரிந்தவர்கள், பாவங்களென்ன? உலகிலே அதிகமாக சிரிக்கவோ, சந்தோஷப் படவோ - மாட்டார்கள் என்பதைத்தான், நபியவர்கள், எனதுயிர் எவனின் கைவசமுள்ளதோ அவனின் மீது சத்தியமிட்டுச் சொல்கிறேன், நான் பார்க்கின்றவைகளை நீங்கள் பார்ப்பீர்களானால் குறைவாகச் சிரிப்பீர்கள்! அதிகமாக அழுவீர்கள், என்று தனது தோழர்களைப் பார்த்து சொன்ன போது, அப்படி தாங்கள் என்ன பார்த்தீர்கள்? எனக் கேட்க சுவர்க்கமும் - நரகமும் என பதில் தந்தார்களென்றால் நமது நிலையை நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

எனவே அன்பர்களே! நமது இவ்வுலக வாழ்வுக்குப் பின் மறு உலக வாழ்வு, ஒன்று உண்டு. அவ்வுலக வாழ்வு, ஒன்று சுவன வாழ்வாக அல்லது நரகவாழ்வாக அமையும். நாம் இவ்வுலகில் அமைத்துக் கொள்கின்ற வாழ்க்கையைப் பொறுத்துத்தான். எனவே நமது வாழ்க்கையை அல்லாஹ்வும் அவனது தூதரும் எவ்வழியில் நடை போட வேண்டும் என்று நமக்கு காண்பித்தார்களோ, அவ்வழியில் நடைபோட, நாம் இன்றே முனைவோமாக! அதற்கு மாற்றமான - நாற்றமிகு நரகிற்கு நடைபோடும் வழிகளை, முளையிலேயே கிள்ளியெறிவோமாக, வல்ல அல்லாஹ் துணை புரிவானாக. ஆமீன்

முதற் பதிப்பு

கல உரிமையும் வெளியீட்டாளருக்கே

ஹதியா ரூ. 15

விற்பனை உரிமை:

காஜியார் புக் டிப்போ
முஸ்லிம் தெரு, M. சாவடி,
தஞ்சாவூர்

அச்சிட்டோர்:

காஜியார் பதிப்பகம்

முஸ்லிம் தெரு, M சாவடி, தஞ்சாவூர் - 613 001. செல் : 98424 11890

பொருளடக்கம்